Registered as a News Paper

பக்கம் – 16

# ஈழநாதம்

விலை: 12.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்—14 வெள்ளி—14 30—05—ஜூன்,2003



## காத்திருக்கும் நம்பிக்கைகளும் நம்பிக்கையீனங்களும்





## இராசதந்திரிகளின் இறுக்கநிலை





ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 30.05.2003

# நாம் சமாதானத்தின் சாட்சிகளல்ல... அதன் பங்காளிகள்....

எல்லா நாடுகளும் - அதாவது சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் சகல நாடுகளும் 'ரோக்கியோ' மாநாட்டின் முக்கியத்துவத் தன்மையை வலியுறுத்தி அதில் விடுதலைப்புலிகள் அவசியம் பங்கு கொள்ளவேண்டும் என்று ஒவ்வொரு நாளும் அழைப்பு விடுத்த வண்ணம் உள்ளன.

போரினால் அதுவும் தமிழ்மக்களுக்கு எதிரான அவர்களை அழித்தொழிக்கும் இலக்குடனும், அவர்களின் பாரம்பரிய தாயக நிலத்தை இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவரும் திட்டத்துடனும் சிறிலங்கா அரசு மேற்கொண்டபோரினால் அதல பாதாளத் துள் வீழ்ந்துள்ள சிறிலங்காவை நிமிர்த்த இந்த மாநாடு மிக அவசியமானது. அதுவும் சிறிலங்கா அரசுக்கு மிகமிக அத்தியாவசியமானது என்பதில் ஐயமில்லை.

இந்த மாநாட்டில் சிறிலங்கா தனது சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டின் ஸ்திரத்தன்மையினை சர்வதேச சமூகத்திற்கு உத்தரவாதப்படுத்தி அடையாளப்படுத்துவதன் மூலமே முன்னெப்போதும் பெற்றிராத அபரிமிதமான நிதியுதவியை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

அதாவது சமாதானத்தின் பேரால், புனர்வாழ்வு, புனரமைப்பு என்பதன் பேரால், அவர்கள் அந்த நிதியை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இந்த மாநாட்டின் மூலம் கிடைக்கும்.

இதில் விடுதலைப்புலிகளை அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என எல்லோரும் வலியுறுத்துவதன் நோக்கம் சமாதானத்திற்கான சாட்சிகளாக அந்த மாநாட்டில் அவர்களை அடையாளம் காட்டுவதற்குத்தான் என்றே அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதுவரை காலமும், இடைக்கிடை தோன்றிய சமாதான நம்பிக்கைச் சமிக்ஞைகளின் போதான உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் போதும், இப்படி சமாதானத்தின் பேரால் -புனர்வாழ்வு, புனரமைப்பு ஆகியவற்றின் பேரால் சர்வதேச சமூகத்திடம் நிதி பெறப்பட்டதுண்டு. பெரும் பிரச்சார ஆரவாரத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகளினால் உண்மையான பாதிப்புகளுக்குள்ளான, புனர்வாழ்வுக்கும் புனரமைப்புக்கும் ஆட்படவேண்டிய தமிழ்மக்களும், தமிழர் நிலமும் எந்தவிதமான நன்மைகளையும் பெற்றதில்லை.

அவர்கள் பேரினவாத அரசுகளால் காலம் காலமாக இந்த விடயத்தில் ஏமாற்றப்பட்டே வந்துள்ளார்கள்.

இதில் வேடிக்கை என்ன வென்றால் இப்போது சமாதானத்தின் பேரால் புனர்வாழ்வுக்கும் புனரமைப்புக்கும் அள்ளி வழங்க முன்வரும் நாடுகளில் பலவும், எமது மக்களுக்கெதிரான சிறிலங்கா அரசின் யுத்தத்திற்கும் - பாதுகாப்புச் செலவினம் என்ற வகையில் -பணமாகவும் ஆயுதங்களாகவும் ஏனைய இராணுவ உதவிகளாகவும் அள்ளிவழங்கி அனுசரணை புரிந்தவர்கள் என்பதேயாகும்.

இன்று அரசியல் தீர்வுகாண சமாதானத்தை வலியுறுத்தி பேச்சுவார்த்தைகளை ஊக்குவிக்க முன் வருவோர் இந்த நாட்டின் பிரச்சினை, அரசியல் பிரச்சினைதான் பயங்கரவாதப் பிரச்சினை என்பதை புரிந்து கொள்வதற்கு ஒரு போரை நடத்த அனுசரணை வழங்கி, அதன் மூலம் ஓர் இனம், தனது பாரம்பரிய மண்ணிலேயே பேரழிவைச் சந்திக்க வைத்துள்ளனர் என்பதை இப்போதாவது உணர்வார்களா?

எனினும் அதுவல்ல இப்போது பிரச்சினை. அது எப்போதுமே வல்லாதிக்க சக்திகளின் சுபாபம் என்பதால் அதனைவிட்டு விடுவோம். ஆனால் இப்போதைய சமாதானத்திற்கு என்ன உத்தரவாதத்தை இதே சர்வதேச சமூகம் வழங்கப்போகிறது என்பதே இப்போதுள்ள கேள்வி.

தங்கள் மக்களின் புனர்வாழ்வையும், தமது மண்ணின் புனரமைப்பையும் தீர்க்கமான முறையில் நடைமுறைப்படுத்த இனியும் சிறிலங்கா அரசின் நிர்வாகக் கட்டமைப்புக்களில் தங்கியிருக்கவோ, நம்பியிருக்கவோ முடியாது என்ற நிலையில் தான் இடைக்கால சுயநிர்வாகக் கட்டமைப் பொன்றை விடுதலைப்புலிகள் கோரி நிற்கின்றனர்.

இதற்கே இந்த ஏற்பாட்டுக்கே இந்தளவு இழுபறியும் பின்வாங்கலுமென்றால் நிரந்தரத் தீர்வு என்ற நிலை வரும் போதோ அல்லது அதுபற்றி பேச ஆரம்பிக்கும் போதோ நிலைமை எப்படியிருக்கும்?

சர்வதேச சமூகத்தின் யோசனைக்கு இக்கேள்வியை சமர்ப்பிக்கின்றோம்...

சமாதானத்திற்கு சாட்சியாக எம்மை அடையாளப்படுத்த முயலாதீர்கள். அதன் உறுதியான நம்பிக்கையான பங்காளிகளாக எம்மை அங்கீகரியுங்கள்..

இதையே தமிழ்மக்கள் இன்றே சர்வதேச சமூகத்திடம் கோரிநிற்கிறார்கள்.




## தூரனின் பார்வை

# துணிச்சல் தமிழ்மக்களின் மரபுவழி மான்மியம்

**இன்னமும்**, ரோக்கியோ மாநாடு நடை பெறுவதற்கு, ஒரு வாரத்திற்கும் ஓரிரு நாட்கள் அதிக மாக மட்டும் உள்ள நிலையில், விடுதலைப்புலிகள் விடுத்துள்ள நியாயமானதும் தற்போதைய சூழலில் மிக அவசியமானதுமான, இடைக்கால நிர்வாகக்கட்டமைப்புத் தொடர்பான கோரிக் கைக்கு அரசிடமிருந்து நம்பிக்கையூட்டக் கூடிய சமிஞ்சைகள் எதுவும் விடுதலைப்புலிகளுக்குக் கிடைக்கவில்லை.

(இக் கட்டுரை எழுதும் நேரத்தில்) இது ஒரு பரபரப்பான நிலை என்பதில் ஐயமில்லை. அரசின் பதில் சாதகமாகவோ, எதிர்பார்ப்பிற்கு மாறாகவோ கூட இருக்கலாம். ஆனால் வெறுமனே இலங்கைக்கு உதவுவதில் ஆர்வத்துடன் இயங்கும் நாடுகளின் ஆசை வார்த்தைகளுக்கோ, அழுத்தங்களுக்கோ, அல்லது அதிகார அச்சுறுத்தல்களுக்கோ விடுதலைப்புலிகள் தமது மக்கள் பாதுகாப்புக்கும், எதிர்கால சமாதான பேச்சுக்களின் முன்னெடுப்புக்கும் அவசியமானதும், ஆதாரமானதுமான நிலைப்பாட்டில் இருந்து இறங்கமாட்டார்கள் என்பது மட்டும் தெளிவு.

இதனை அவர்கள் கடந்த வாரத்தில் மிகவும் அழுத்தமாகவும் அ[illegible]சியல் விவேகத்துடனும் சர்வதேச சமூ[illegible]த்திற்கு விளக்கியிருந்தார்கள்.

பேச்சுவார்த்தை மேசையெ[illegible]ன்பது வெறுமனே வாக்குறுதிகளை அள்ளி வழங்கி - கைதட்டல் பெற்றுக்கொண்டு - மக்களை ஏமாளிகளாக்கி அகலும் அரசியல் மேடையல்ல. அதனை எமது மக்களின் எதிர்கால வாழ்வியல் - அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான அமைதிவழித்தளமாகவே விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் உறுதியாக நினைக்கின்றனர்.

பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், வாக்குறுதிகள் என்ற வரட்டு அரசியல் மாயைகளுள் சிக்கியும், பேரினவாதத் தலைமைகளும் அவர்களுக்கு அனுசரணையான, சுயஅரசியல் இலக்குகளைக் கொண்ட அந்நிய ஆதிக்கசக்திகளும் ஏற்படுத்திய ஏமாற்று பொறிகளுள் வீழ்ந்தும் எமது கடந்தகாலத் தலைமைகள், எமது மக்களுக்கு ஏற்படுத்திய அவலங்களும் அவமானங்களும் இனிமேலும் தொடரக்கூடாது என்பதில் இன்றைய தமிழ் மக்களின் தலைமையும், மக்களும் இறுக்கமாக இருக்கவேண்டியது காலத்தின் அவசியமாகிவிட்டது.

எப்படியும் சமாதானம் என்பது அரசின் நிலையாக இருக்கலாம் ஆனால் இப்படித்தான் சமாதானம் அமையவேண்டும் என்பதை விடுதலைப்புலிகள் வரையறைசெய்து [illegible]வைத்துள்ளதை அரசும் சர்வதேச சமூகமும் புரிந்து கொண்டு அதன் நியாயத்தன்மைக்கு அங்கீகாரமும் - ஆதரவும் வழங்குவதன் மூலம் மட்டுமே இந்த மண்ணில் ஒரு உறுதியான அமைதிநிலையும்,நிரந்தர சமாதானத்தையும் ஏற்படுத்த ஆக்க பூர்வமாக செயற்படமுடியும்.

உறுதியற்ற நிலையில் தள்ளாடும் ஓர் அரசாங்கம், தீர்க்கமான முடிவெடுக்கும் அதிகாரவலுவை, ஆட்சியை கலைத்து அரசைக் கைப்பற்ற தருணம் பார்த்தபடி, அதனை அன்றாடம் மூன்றாந்தர அரசியல் அணுகுமுறைகளால் மிரட்டியும் எச்சரித்தும் கொண்டிருக்கும் சர்வாதிகார போக்குக்கொண்ட ஒரு சனாதிபதியிடம் இழந்துவிட்டிருக்கும் நிலையில், சமாதானத்தின் மீதும், அரசியல்தீர்வின் மீதும் எவ்வளவுதான் விசுவாசத்துடன் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் (அப்படி விசுவாசத்துடன் நகர்வுகள் நடக்கின்றனவா என்பது வேறுவிடயம்) கூட எதனையும் துணிந்து நிறைவேற்றும் அதிகாரம் அதற்கு இல்லாத நிலையில், முடிவுகளை நடைமுறைப்படுத்தல் சாத்தியமேயில்லை.

சமாதானப்பேச்சுக்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு தனது ஆதரவு உண்டு எனக்கூறும் 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற தத்துவத்தின் நாயகியான சனாதிபதி, அது தொடர்பான அரசின் நகர்வுகளை நியாய பூர்வமாக பரிசீலிக்கவோ பேச்சுவார்த்தைகளின் பங்காளிகள் மீது நம்பிக்கை கொள்ளவோ அதற்கான அனுசரணையாளர்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளவோ தயாராக இல்லை என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

இந்நிலையில், சமாதான எதிர்ப்பாளர்கள் குழுக்களுக்கும் பேரினவாத அணிகளுக்கும் தலைமைதாங்கும் சனாதிபதியின் கரங்களில் அதிகாரம்குவிந்து போயுள்ளநிலையில் தொடரும் பேச்சுவார்த்தைகள் - பேச்சுவார்த்தைமேசையை நிறைவேற்று அதிகாரங்கள் எதுவுமற்ற ஒரு 'பொம்மை' அரசு ஒரு தேர்தல் கால பிரச்சாரமேடையாகப் பயன்படுத்தி வெறும் வாக்குறுதிகளின் மூலம் நிரப்பி விடும் ஆபத்து நிச்சயம் இருக்கவே செய்கிறது.

எனவே தான் பேச்சுவார்த்தைகளின் முடிவுகளை நடைமுறைப்படுத்த தமிழ் மக்களுக்கு அளிக்கப்படும் உத்தர வாதங்கள் காலதாமதமின்றி உடனடியாக செயற்படுத்தப் பட ஒரு நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்பதை விடுதலைப்புலிகள் உணர்ந்துள்ளார்கள்.

நிச்சயமாக சிறிலங்காவின் ரணில் - சந்திரிகா இரட்டை ஆட்சியை முரண்பாடான அணுகுமுறைகள் 'சமாதானத்தை' தொடர்ந்தும் அச்சுறுத்தும் என்பதில் தெளிவாக இருக்கும் தமிழ்மக்கள். மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு எனப்பேசப்படும், பரபரப்பாக அறிக்கைவிடப்படும் விடயங்கள் எதனையும் யதார்த்தமாக்கப்போவதில்லை என்பதையும் உணர்ந்தே உள்ளார்கள்.

பேரினவாத ஆட்சியினர், காலம் காலமாக, அவர்களுக்கு சார்பாகவே இயங்கும் வகையில் உருவாக்கிவந்த அரசியல் யாப்புகளும், நிர்வாகக் கட்டமைப்புகளும், சிறுபான்மை மக்களின் - குறிப்பாகத்தமிழ மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் எவ்வாறு நிராகரித்துவந்துள்ளது என்பது ஒரு பெரும்வரலாறு.

அந்த நிராகரிப்பு ஒடுக்குமுறையின் கொடூரத்தை இன்றைய எழுச்சி நிலையிலும் மறக்க தமிழ்மக்கள் தயாராக இல்லை. அதே ஒடுக்கு முறையாளர்களின் வரட்டு வாக்குறுதிகளை நம்பி மீண்டும் பொறிக்குள் சிக்க விடுதலைப்புலிகளும் தயாராக இல்லை.

எனவே தமக்கான புனர்வாழ்வை, தமது மண்ணுக்கான புனரமைப்பை, தமது எதிர்காலத்திற்கான நிர்வாகக் கட்டமைப்பொன்றை அரசினதும், சர்வதேச சமூகத்தினதும் அங்கீகார அனுசரணையுடன் ஏற்படுத்த விரும்புவதில் உள்ள நியாயத்தன்மையையும், அவசியத்தையும், அனைத்துத்தரப்பினரும் புரிந்துகொண்டு செயற்படுவதன் மூலமே, சமாதானம் குறித்த, உறுதியையும், ஒரு தீர்வு குறித்த நம்பிக்கையையும் தமிழ்மக்களுக்கும், ஏனைய அமைதி விரும்பிகளுக்கும் உத்தரவாதப்படுத்த முடியும்.

இதனை விடுத்து சனாதிபதி அச்சுறுத்தல்களை விடுப்பதும், இடைக்கால நிர்வாகத்தை - அரசியல் அமைப்புக்கு அப்பால் நின்று செயற்பட்டு - வழங்குமாறு கோர புலிகளுக்கு என்ன துணிச்சல் என 'சண்டிராணி' பாசையில் கேட்பதும் அர்த்தமற்றதும் - விவேகமற்ற நடவடிக்கையேயாகும்.

எங்கள் மீது உங்களின் வெறிப்படையை ஏ[illegible] எம்மைக்குண்டள்ளிப் போட்டு கொன்று அதற்கு சமாதானத்திற்கான யுத்தம் என்று பேரிட்டு கொக்கரிக்கஉங்களுக்கு என்ன துணிச்சல் என்று நாம் கேட்டதில்லையே...

துணிச்சலை - துணிச்சலால் மட்டுமே துணிந்து எதிர்கொண்டோம்...

அநியாயத்தை தட்டிக்கேட்கவும் ,நியாயத்தை நிமிர்ந்து கேட்கவும், அடக்குமுறையை அடியோடு அழிக்கவும் ஒரு சமூகம் கிளர்ந்தெழுகின்ற தென்றால் அந்தத்துணிச்சல் அவர்களது மரபு வழிக்குணாம்சம் என்பதைப் புரிந்துகொள்ளல்வேண்டும். விடுதலைப் புலிகளும் - தமிழர்களும் அத்தகைய வீரமரபொன்றின் வழித்தோன்றல்களே...

நியாயத்தை கேட்கவும் அதற்காக போராடவும் அவர்கள் தயங்கவே மாட்டார்கள்.

நான் ஒரு மூலைக்காகப் பிறந்தவனல்ல; உலகம் அனைத்தும், என் சொந்த பூமி. - ஸெனெகா (இளையவர்)

# இயற்கையின் சீற்றமும் தமிழர்களின் சீற்றமும்

**நிலாந்தன்**

**கடந்த** கிழமை மந்தமாகக்காணப்பட்ட பேச்சுவார்த்தை அரங்கில் இந்தக்கிழமை சில அசைவுகள் நிகழத்தொடங்கியுள்ளன.

புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக ஏற்பாட்டை குறித்த அரசாங்கத்தின் பதில் தான் இனி அடுத்தகட்டத்தைத் தீர்மானிக்கும்.

கிளிநொச்சிக்கு வந்து போகும் ஹெலி கொப்ரர்களில் என்ன வருகிறது என்ன போகிறது என்பது இப்பொழுது பிரச்சினையல்ல. மாறாக தரப்படும் எந்தவொரு வாக்குறுதியும் அரசியலமைப்பை மீறிச்செல்லும் சக்தியும் துணிச்சலும்மிக்கதாக இருக்கப்போவதில்லை என்பதே இங்குள்ள பயங்கரமான ஒரு யதார்த்தம்.

சில சமயம் புலிகள் ரோக்கியோவுக்கு போகக்கூடிய நிலைமைகள் தோன்றினாலும் கூட பிறகும் ஏதாவது ஒரு கட்டத்தில் அரசியலமைப்பில் முட்டுப்பட்டு இறுகி நிற்கவேண்டி வரலாம்.

அடுத்த சனாதிபதித் தேர்தல் வரைக்கும் அல்லது சிலசமயம் சந்திரிகா, ரணிலின் அரசாங்கத்தைக் கலைக்கும் வரைக்கும் சமாதானத்தின் கதி இப்படித்தான் இருக்கும். எதிலும் திட்டவட்டமான ஒரு முடிவுக்குப் போகமுடியாது.

இதில் அதிசயம் போல அற்புதம் போல ஏதாவது நிகழ்ந்தால் தவிர நிலைமைகளில் பெரியபாய்ச்சல் எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை.

அதிசயங்கள் அற்புதங்களின் காலம் எப்பொழுதோ முடிந்துவிட்டது என்று கடந்த நூற்றாண்டிலேயே கூறிவிட்டார் **எக்ஸடஸ்** நாவலை எழுதிய இயன் ஊரிஸ்

இப்பொழுதுள்ள நிலைமைகள் முன்பு சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் நிகழ்ந்த இழுபறிகளை நினைவுபடுத்துமாப் போலிருக்கின்றன.

ஆனால் இங்கேயுள்ள முக்கிய வித்தியாசம் நடுவரின் மீது இன்னமும் முழுமையாக நம்பிக்கை இழக்கப்படவில்லை என்பதே. அல்லது நடுவர் விளையாட்டுவீரராக மாறப்போகிறார் என்ற அச்சமும் சந்தேகமும் இன்னமும் தமிழர்களிடம் பரவலாகத்தோன்றவில்லை என்பதே.

இந்த ஒரு விஷயத்தில் தான் இப்பொழுது எல்லாமும் தொங்கிக்கொண்டிருப்பது போலத் தோன்றுகின்றது.

ஆனால் இதையும் மீறி நிலைமைகள் குழம்பமுடியும். சமாதான முயற்சிகள் தேங்கி நின்றுவிடும் காலங்களில் எல்லாம் சிறிய உணர்ச்சிவசப்படுத்தும் சம்பவங்களே போதும் யுத்தத்தைத் தொடங்குவதற்கு.

ஈழப்போரில் இதற்கு முந்திய சமாதான




முயற்சிகளில் இப்படி நடந்திருக்கிறது.

இம்முறையும் அத்தகைய உணர்ச்சி வசப்படுத்தும் சம்பவங்கள் ஏதும் நடந்தால் நிலைமைகள் கையைமீறிப்போதல் கூடும்.

இனியும் ஒரு யுத்தம் வெடித்தால், விளைவுகள் அண்மையில் உண்டாகிய வெள்ள அழிவுகளை விடவும், பயங்கரமானவைகளாய் இருக்கும்.

நாட்டில், யுத்தநிறுத்த காலத்தில் நிகழ்ந்த ஆகப் பெரிய அழிவாக மேற்படி வெள்ளஅனர்த்தம் காணப்படுகின்றது.

யுத்த காலங்களில் இலங்கைத்தீவில் ஆண்டொன்றுக்கு சராசரியாக கொல்லப்படுவோர் தொகை இரண்டாயிரம் வரைவரும் என்று கூறப்படுகிறது.

இதில் ஏறக்குறைய பத்திலொருபங்கு தொகையினரை அண்மையில் பெருகிய வெள்ளம் கொண்டுபோய்விட்டது. அதுவும் மிகக் குறுகிய காலத்துள்.

பொதுவாக, யுத்தகாலங்களில் எங்காவது ஒரு பெரியமுகாம் தாக்கப்படும் போதே இப்படியாக அழிவுகள் உண்டாவதுண்டு.

இப்பொழுது யுத்தநிறுத்த காலத்தில் அதுவும் சமாதானம் அதிகம் சோதனைக்குள்ளாகியிருக்கும் ஒரு சூழலில் இப்படியொரு அழிவு வந்திருக்கிறது. சிங்களவர்களுக்கு மிகப்புனிதமான வெசாக்நிலவு தேயமுன்பு வந்த இவ்வழிவு அவர்களுக்கு எதையோ முன்னறிவிப்பது போலிருக்கிறது.

சிலசமயம் சமாதானம் முறிந்தால் அழிவுகள் இதைவிட பலமடங்கு பயங்கரமானவைகளாக இருக்கும் என்பதே அது.

எனவே, வெள்ள அழிவின் பின்னணியில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான எல்லாவழிவகைகளைக்குறித்தும் அவர்கள் சிந்திக்க வேண்டிய ஒருவேளை வந்துவிட்டது.

இந்த வெள்ள அழிவிற்குப்பின்னால் இருந்த அரசியல் பற்றி இப்பொழுது தகவல்கள் வரத்தொடங்கியுள்ளன.

சந்திரிகா-ரணில் அதிகாரப்போட்டியால் உண்டாகிய நிர்வாகக் குழறுபடிகளும் வினைத்திறன் போதமைகளும் தான் உரிய நடவடிக்கைகள் உரிய காலத்தில் உரிய வேகத்தில் எடுக்கப்படாததுக்குரிய காரணங்கள் என்று இப்பொழுது கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டு ரணில் சில பிரதி அமைச்சர்களை நியமிக்க முயன்ற போது சந்திரிகா அதற்கு முதலில் ஒத்துவரவில்லை.

இந்தப் பிரதிஅமைச்சர்களில் ஒருவரான சரத்சந்திர ராஜகருணாவுக்கு, அனர்த்த காலங்களில் நிலைமைகளைக் கையாளும் அமைச்சுப் பொறுப்பை கொடுக்க முயற்சித்த போது சந்திரிகா அதற்கு மறுத்துவிட்டார். அனர்த்த காலங்களில் நிலைமைகளைக் கையாள்வது தனது கட்டுப்பாட்டிலுள்ள சனாதிபதி செயலணியின் பணி என்றும் எனவே அதற்கென்று ஒரு பிரதிஅமைச்சரை உருவாக்குவது வீண் என்றும் அவர் அப்பொழுது கூறினார்.

மிக நீண்ட இழுபறிக்குப் பின்னரே சந்திரிகா ஒரு இணக்கத்திற்கு வந்தார்.

ஆனால் இரத்தினபுரிவெள்ளத்தில் மூழ்கிய போது சம்பந்தப்பட்ட பிரதிஅமைச்சரோ அல்லது சனாதிபதி செயலணியோ விரைந்து செயற்படவில்லை என்று கூறப்படுகிறது. ஒருவர் மாறி ஒருவர் மீது பழியைப்போட்டுவிட்டு யாருமே விரைந்து செயற்படாததன் விளைவே இந்த அழிவு என்றும் கூறப்படுகிறது.

அந்தப்பிரதேசத்தில் கடும் மழை பெய்யும் என்று வானிலை அறிவிப்பு மையம் ஏற்கனவே எச்சரித்திருந்த போதும் கூட, CNN மற்றும் BBC யின் வானிலை முன்னறிவிப்புக்களில் இது காட்டப்பட்டபோதும் கூட உரிய அமைச்சர்களும் அதிகாரிகளும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதில் ஒரு செய்தி சிங்களவர்களுக்குண்டு. அது என்னவெனில் - சிங்கள அரசியல் வாதிகளுக்கிடையிலான அதிகாரப் போட்டி எப்படி அப்பாவிச் சிங்களவர்களை பலியிட்டது என்பது.


இதுதான் கடந்த பலதசாப்தங்களாகத் தமிழர்களுக்கும் நடந்துவருவது.

கொழும்பு மைய அரசியலில், இரு பெரிய கட்சிகளுக்கிடையிலான போட்டிக் குள் சிக்கிய ஒன்றாகவே தமிழர்களின் உரிமையும், உயிரும் இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது மிருக்கிறது.

இம்முறை உண்டாகிய வெள்ள அனர்த்தம் கடந்த சுமார் 50 ஆண்டுகளில் மிகப் பெரியது என்று கூறப்படுகிறது. இதற்குப் பிரதான காரணம் இயற்கையை இரக்கமின்றியும் பொறுப்பின்றியும் சுரண்டியமை தான் என்று சிங்கள அறிஞர்களே கூறுகிறார்கள்.

தனியார் மயமாக்கல் மற்றும் திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் கீழ் இலங்கைத் தீவு நிபந்தனைகள் ஏதும் இன்றி அந்நியருக்குத் திறந்துவிடப்பட்டதன் விளைவே இதெல்லாம்.

எப்பொழுது இச்சிறுதீவு பல்தேசியக் கொம்பனிகளின் கவர்ச்சிக்கன்னியாக மாறியதோ அப்பொழுதிருந்தே அதன் கன்னித் தன்மை அழியத்தொடங்கிவிட்டது. இப்படிக் 'கற்பழிக்கப்பட்ட' இயற்கையே இப்பொழுது பழிவாங்குகிறது.



நிலைமையைக் கட்டுப்படுத்ததன்னால் முடியாது என்ற ஒரு கட்டத்தில் தான் அரசாங்கம் இந்தியாவிடம் உதவி கேட்டதாகக் கூறப்படுகிறது.

இதிலிருந்து சிங்கள அரசியல்வாதிகள் படிக்கவேண்டிய ஒரு பாடம் இருக்கிறது. இயற்கையை பொறுப்பின்றிச்சூறையாடினால் அதற்கு எத்தகைய விலை கொடுக்கவேண்டியிருக்கும் என்பதே அது.

அதேசமயம் இதிலிருந்து சாதாரண சிங்களச்சனம் படிக்கவேண்டிய ஒரு பாடம் இருக்கிறது. அதாவது தமது சொந்த இயற்கையை பின்விளைவுகளைப் பற்றிச் சிந்தியாது சூறையாடியதோடு பிறரையும் சூறையாட அனுமதித்த அதே நாட்டுப்பற்றில்லாத தலைவர்களே தமது சொந்த ச்சனங்களாகிய தமிழர்களையும் பின்விளைவுகளைப்பற்றிச் சிந்தியாது வேட்டையாடினார்கள் என்பதே.

பொறுப்பின்றிக் கையாளப்பட்ட இயற்கை பொறுமையிழந்தபோது விளைவு பயங்கரமானதாயிருந்தது.

பொறுப்பின்றிக்கையாளப்பட்ட தமிழர்கள் பொறுமையிழந்தபோதும் விளைவுகள் பயங்கரமானவைகளாயிருந்தன.

இயற்கையையும் தமிழர்களையும் பொறுப்பின்றிக் கையாளும் நிலை தொடர்ந்தால் இயற்கையின் சீற்றமும் தமிழரின் சீற்றமும் இனியும் இனியும் சிங்களவர்களின் மீது வரும்.

தமிழர்களின் சீற்றம் வெளிப்பட முடியாத ஒரு யுத்தநிறுத்த காலத்தில் இயற்கையின் சீற்றம் பேரழிவைக் கொண்டுவந்திருக்கிறது.

தமிழர்கள் தற்சமயம் தமது சீற்றத்தை மென்மையான வழிகளில் - பகிஸ்கரிப்புக்கள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் அதே சமயம் ஒரு நல்லெண்ணச் சமிக்ஞையாக ஒரு தொகுதி உதவிப்பொருட்களை தென்னிலங்கைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இலங்கைத்தீவின் நவீன அரசியலில் மிக அரிதான ஒரு நிகழ்வு இது.

வடக்கிலிருந்து குண்டுகள் அல்லது கொல்லப்பட்ட சிப்பாய்களின் சவப்பெட்டிகள் தான் வரும் என்று கேள்விப்பட்டிருந்த சிங்களச் சனத்துக்கு புலிகளிடமிருந்து நிவாரணமும் வர முடியும் என்பது நம்பக்கடினமான ஒரு செய்தியே.

"தமிழர்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டிய சிங்களவர்களுக்கு தமிழர்கள் நிவாரணம் தரும்போது உண்டாகியிருக்க வேண்டிய குற்ற உணர்ச்சியை எமது மீடியாக்கள் போதியளவு பிரதிபலிக்கவில்லை. இது புலிகளின் பிரச்சார உத்திகளில் ஒன்று என்றே பொதுவாக சிங்கள மற்றும் ஆங்கில மீடியாக்கள் நம்புவதுபோலத் தெரிகிறது..." என்று கூறினார் ஒரு படித்த சிங்களவர்.

நாட்டின் ஒரு பகுதி வெள்ளத்துள் மூழ்கிக்கொண்டிருந்தபோது தம்புள்ளவில் நடந்துகொண்டிருந்த கிறிக்கெட் ஆட்டத்தை தொலைக்காட்சியில் பார்த்து ரசிக்கும் ஒரு மனோநிலைதான் கொழும்பில் சிங்களவர் மத்தியில் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்த ஆட்டத்தில் இலங்கை தோற்பது என்பது வெள்ள அனர்த்தங்களை விடவும் தாங்கக் கடினமான ஒரு தேசிய இழப்பாயிருக்கும் என்று கொழும்பில் கிறிக்கெட் விசிறிகள் நம்பியதாகவும் கூறப்படுகிறது.

வடக்கு-கிழக்கில் யுத்தம் நடந்தபோது எத்தகைய குற்ற உணர்ச்சியும் இன்றி கொழும்பில் தொலைக்காட்சி பார்த்துப் பழகிய ஒரு மனோநிலையின் நீட்சியே இது.

வெள்ளப்பெருக்கு வந்து ரணிலை சந்திரிகாவிடமிருந்து ஒப்பீட்டளவில் காப்பாற்றி விட்டது என்றொரு கதை கொழும்பில் சில வட்டாரங்களில் காணப்படுகிறது.

இருக்கலாம் தான். இயற்கை அனர்த்தம் என்று ஒன்று வரும் போது சந்திரிகா வெளிப்படையாக அதிகாரப்பறிப்பில் ஈடுபடுவது கஷ்டம் தான்.

ஆனால் புலிகள் இல்லாத ரோக்கியோ மாநாடு எனப் படுவது ரணிலைப் பொறுத்தவரை அவ ருடைய வீழ்ச்சியின் தொடக்கமாய் மாறி விடக்கூடும் என்பதை யிட்டு ரணில் என்ன நினைக்கிறார்?

இடையில் நின்று சமாதானம் செய்யும் நாடுகள் என்ன நினைக்கின்றன?

நடக்கவிருக்கும் ரோக்கியோ மாநாட்டைப் போலவே ஒரு மாநாடு ஆனால் சிறிய அளவிலானது, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானில் நடந்தது.

அது இந்தோனேஷியாவின் அஷே போராளிகளை சமாதானத்தை நோக்கி உந்தித் தள்ளும் நோக்கத்துடன் கூட்டப்பட்ட ஒரு மாநாடு.

இந்தோனேசியாவிலிருந்து பிரிந்து கடந்த ஆண்டு கிழக்குத்தீமூர் சுதந்திரமடைந்தது போலவே தாமும் ஒருநாள் சுதந்திரமடைந்து விடலாம் என்று 27 ஆண்டுகளாகப் போராடி வரும் அஷே போராளிகள் நம்புகிறார்கள்

சமாதானத்திற்கான நிதியுதவிகள் மூலம் அவர்களுடைய போராட்டத்தை திரையச் செய்துவிடலாம் என்று ஜப்பானும், இந்தோனேசியாவும் நம்பின.

ஆனால் மாநாட்டில் கலந்துகொண்ட போதும் கூட அஷேபோராளிகள் தமது ஆயுதங்களைக் கைவிட தயாராயிருக்கவில்லை. இந்தோனேசியாவும் சமாதானத்துக்கு விசுவாசமாக இருக்கவில்லை. இப்பொழுது அங்கே யுத்தம் வெடித்திருக்கிறது.

ஜப்பானைப் பொறுத்தவரை இதுஒரு தனிப்பட்ட தோல்வி.

இந்நிலையில் புலிகள் இல்லாத ரோக்கியோ மாநாடு, ஜப்பானுக்கு மேலும் ஒரு தோல்வியாக அமையக்கூடும்.

இதைத் தவிர்ப்பதென்றால் சில துணிச்சலான முடிவுகளை எடுக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவை அவர்கள் தூண்ட வேண்டியிருக்கும்.

கடந்த 15 மாத கால யுத்தநிறுத்த அனுபவத்தின்படி ரணில் எதுவரை போவார், எதுவரைபோகமாட்டார் என்பது ஓராளவுக்குத் தெரிந்துவிட்டது.

இனி தியாகம் செய்தால் தான் சமாதானம் உண்டு.

இயற்கையின் சீற்றத்தை வைத்து சந்திரிகாவைச் சமாளித்தாயிற்று. ஆனால் தமிழர்களின் சீற்றத்தை எப்படிச்சமாளிப்பது?

இயற்கையின் சீற்றத்தை விடவும் தமிழர்களின் சீற்றமே ஒப்பீட்டளவில் பெரிய பயங்கரமான அனர்த்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது.

இயற்கையின் சீற்றத்தை அலட்சியம் செய்ததன் விளைவை நாடு அனுபவித்தாயிற்று.

இந்நிலையில் - தமிழர்களின் சீற்றத்தை அலட்சியம் செய்தால் முடிவு எப்படியிருக்கும்? ●

உயிருள்ளது அனைத்தும் புனிதமானது; உயிர், உயிரில் பரவசம் கொள்கிறது. – வில்லியம் பிளேக்

# நறுக்கென...

## இந்திய உள்நோக்கமும் வெளி விருப்பமும்...



'சிறிலங்காவின் அரசியல் குழப்பத்தையும், சனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கிடையேயான அரசியல் சர்ச்சையையும் சுமுகமாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும்' - என்று இந்தியா ரணிலிடம் தெரிவித்திருக்கிறதாம்.

இதுவே இந்தியப் பிரதமரின் விருப்பம் என பிரதமர் 'வாஜ்பாய்'யின் ஆலோசகர் பிரதேஷ்மிஸ்ரா கூறியுள்ளார். நல்லது, சந்தோஷம்.

ஆனால் திரைமறைவில் 'பல்வேறு வழிகளிலும்' சுய அரசியல் அபிலாஷைகளுக்கான இலக்குடன் இலங்கையின் அரசியல் குட்டையை குழப்பிக் கொண்டே ஆதாயம் தேட முற்பட்டவண்ணம், குட்டை தெளிய வேண்டும் என விருப்பம் தெரிவிப்பதில் அர்த்தம் எதுவும் இல்லை.

சிறிலங்காவின் அரசியல் தலைமைகள் 'மாறிமாறி' உத்தியோக பூர்வமுறையிலும், தனிப்பட்ட வகையிலும், அடிக்கடி இந்தியத் தலைமையை சந்திப்பதும், பேசுவதும், அது தொடர்பாக பின்னர் மறைபொருள் கொண்ட அறிக்கைகள் விடுவதும் ஒரு வழமையான நிகழ்வாகிவிட்ட நிலையில் இலங்கை விவகாரம் தொடர்பான இந்தியாவின் வெளிப்படையான நிலைப்பாடு இரட்டைத் தன்மை கொண்டவையாக உள்ளதாக இருப்பதையே காட்டுகிறது.

சிறிலங்காவின் இன்றைய அரசியல் குழப்பங்களுக்கும் சிக்கல்களுக்கும் - இந்தியாவின் மறைமுக அரசியல் காய்நகர்த்தல்களும் முக்கிய காரணம் என்ற ஆய்வாளர்களின் கூற்றை இந்தியா மறுத்தாலும், நிராகரித்தாலும் கூட, அதில் பெருமளவு உண்மையே உள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்திய - சீன -அமெரிக்க ஆதிக்க சக்திகளின் மேலாதிக்க ஆளுமைக்கான போட்டியில் சிறிலங்கா பகடைக்காயாகவே எல்லா நாடுகளாலும் பயன்படுத்தப்படுகின்றது.

இத்தகைய பயன்படுத்தல் மூலோபாயத்தின் விளைவுகளே சிறிலங்காவின் அரசியல் குழப்பங்களாகும்.

சனாதிபதி - பிரதமர் ஆகியோருக்கிடையிலான 'முறுகல்' நிலைக்கும் இந்தச் சிக்கல்களின் தாக்கமே காரணமாகும் . - இலங்கையை ஏதோ காரணத் திற்காக இலக்கு வைத்து கையாளும் எல்லாநாடுகளும் இலங்கை விவகாரத்தில் 'பிள்ளையையும் கிள்ளி அழவிட்டு ரசித்துக்கொண்டே தொட்டிலையும் ஆட்டி' 'ஆராரோ'பாடும் கைங்கரியத்தை செய்கின்றதை ரகசியமாகப்பேண முயன்றாலும் - அது பகிரங்கமான ரகசியமாகவே உள்ளது.

இந்த வகையில், இந்தியாவின் அணுகுமுறையும் இதற்கு முரண்படாத ஒன்றாகவே இருக்கும்.

நினைப்பது ஒன்று சொல்வது வேறொன்று. இது இன்றைய உலகின் அரசியல் யதார்த்தம்.... இந்தியா நினைக்கும் 'சுமுக முடிவு' இந்திய அபிலாஷைகளுக்குட்பட்டதாக இருக்கவேண்டும் என்பது மறைபொருளாக இருக்கவே செய்யும்....

## ஆலோசனைகள் சரி... ஆனால் யதார்த்த நிலைமை...



'குறுகிய இனவாத மனப்போக்கிலிருந்து விலகி அதிகாரத்தைப் பரவலாக்குங்கள்' - இவ்வாறு சிறிலங்காவின் நாடாளு மன்றத் தூதுக்குழுவினரிடம் பெல்ஜியம் நாட்டின் நாடாளுமன்றத்தின் தலைவர் தெரிவித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. அதிகாரத்தை பகிர்ந்து பரவலாக்கிக் கொள்வதற்கான சமஷ்டி அரசியல் ஆட்சிமுறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உறுதியான சமாதான நிலையை உருவாக்க முடியும் என்றும் அவர் ஆலோசனை கூறியுள்ளாராம்.

பெல்ஜியத்தின் சமஷ்டி ஆட்சிமுறைகுறித்தும் விளக்கியுள்ள அவர் தங்கள் நாட்டில் மக்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளாராம். எல்லாம் சரிதான்.

அது பெல்ஜியம் - இது சிறிலங்கா என்ற வேறுபாட்டை அவர் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை போலும். இது யுத்தமா? சமாதானமா? என்று சிறுபான்மையினரை பெரும்பான்மையினர் சவால் விட்டு கேட்ட தலைமைகள் உள்ளநாடு....

சமாதானத்திற்காக யுத்தத்தை தேர்வு செய்த சனாதிபதியின் அதிகாரத்தினுள் சிக்கியுள்ள நாடு...

பேரினவாதத்தை பிரதான அரசியல் கோட்பாடாக வரித்துக் கொண்ட தலைவர்களின் ஆட்சியின் கீழ் மாறிமாறி அழிந்து கொண்டிருக்கும் நாடு...

இங்குள்ள தலைவர்கள் 'ஒரு தீர்வு ஏற்பட்டு விட்டால் தமது அரசியல் வாழ்வே அஸ்தமித்துவிடும்' என்று உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

இங்குள்ள இரட்டை ஆட்சிமுறையில் சர்வாதிகாரமும் கொண்ட சனாதிபதியும், அவரால் ஆட்டிப்படைக்கக் கூடிய நாடாளுமன்றமும் முரண்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

சமாதான நடவடிக்கைகள் குறித்தே சண்டை பிடிக்கும் தலைமைகள் 'தீர்வு' என்ற பிரச்சினை வரும்போது எப்படி மோதிக் கொள்வார்கள் என்பதற்கு தற்போதைய நிகழ்வுகள் சிறந்த உதாரணங்களாகும்.

அரசியல் அற்பத்தனம் இங்கு மலிந்து போயுள்ளது. புன்னகையைக் கூட விஷப் புன்னகையாகவும் விஷமப் புன்னகையாகவும் பகிர்ந்து கொள்ளும் அரசியல் நாகரீகமே இங்கு கோலோச்சுகின்றது. ஆள் ஆளைக் காலை வாரிவிடும் திட்டத்துடன் தான் சனாதிபதியும் பிரதமரும் இங்கு கைகுலுக்கிக் கொள்கிறார்கள்.

இந்த நிலையில் அதிகாரப் பரவலாக்கல் - சமஷ்டி தீர்வு என்கிற ஆலோசனைகள் குளத்தில் எறிந்த கற்கள் தான்.

முதலில் சனாதிபதி தன்னிடம் குவிந்துள்ள நிறைவேற்று அதிகாரவலுவைத் தளர்த்தி - தன்னினத்தைச் சேர்ந்தவரான ரணிலின் தலைமையிலான நாடாளுமன்றத்துடன் அவற்றைப்பகிர்ந்துகொள்ள முன்வரவேண்டும். அது சாத்தியமில்லாத வகையில் தமிழ் மக்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொண்டு 'சமஷ்டி' ஆட்சி முறைக்கு மாற சனாதிபதியும் பேரினவாத சக்திகளும் முன்வர வேண்டும் என கூறப்படும் ஆலோசனைகள் அர்த்தமற்றவைகளாகவே இருக்கும்.

இந்த நிலையில் திரைகடலோடி தீர்வு யோசனைகள் தேடுவதும் ஒரு வெட்டிப் பொழுது போக்காகவே அமைந்துவிடும்.

## ஆட்சிக் கனவுடன் அசத்துகிறார் அமுனுகம...



இன்று பொதுசன ஐக்கிய முன்னணியின் மிகப் பெரிய பிரசாரதூணாக, முன்னணியில் தன்னை முன்னிறுத்திக் கொண்டுள்ளவர் கலாநிதி சரத்அமுனுகம தான்.

ஒரு காலத்தில் ஐக்கிய தேசியகட்சியின் குழறிப் பிரசாரகாரராக விளங்கியவரும் இவர்தான்.

கட்சிமாறியதும் கருத்தை மாற்றும் இயல்பு கைவந்த வர்களில் இவர் முக்கியமானவர்.

எப்படியாவது ஐ.தே.முன்னணியை சனாதிபதி கலைக்க வேண்டும்... கலைப்பார்.. என்ற நம்பிக்கையில் அன்றாடம் ரணில் ஆட்சியை மிரட்டும் விதத்திலான அறிக்கைகளை விடுப்பதில் இவருக்கு நிகர் இவரே தான். இந்த விடயத்தில் ஏற்கனவே சந்திரிகாவின் 'உள்வட்டப்' பிரமுகர்களான மங்கள சமரவீர, போன்றோரையே 'தூக்கிச்சாப்பிடும்' அளவுக்கு வளர்ந்துள்ளார்.

எல்லாமே ஆட்சி மாறினால் கிடைக்கக்கூடிய 'பதவி' கதிரையின் மீதான இலக் குடன் கூடிய நடவடிக்கை தான்.

இப்போது அவர் கடைசியாக விடுத்துள்ள மிரட்டல் விரைவில் புதிய அரசை அமைப்போம். எல்லாமே ஒரு பொழுதுக்குள் தலைகீழாக மாறிவிடும். புதிய அர சின் முதற்பணி ஊழல் செய்துள்ள இன்றைய அரசின் அமைச்சர்களை கைது செய்து நீதிமன்றில் நிறுத்துவது தானாம்.. அதற்கு ஏதுவாக ஆட்சி மாறியதும். ஊழல் அமைச்சர்கள் ஊரைவிட்டுஓடாமல் விமான நிலையத்தை மூன்று நாட்களுக்கு மூடிவிடுவார்களாம்...

எப்படி இருக்கிறது- 1995 முதல் ஏழாண்டுகாலம் ஊழலையும் யுத்தத்தையும் மட்டுமே புரிந்த கும்பல், இப்போது ஓராண்டுகால ஊழல் பேர்வழிகளைப் பிடிக் கப்போகின்றார்களாம்...!

சிறிலங்காவின் அரசியல்வாதிகளின் பொழுதுபோக்கே ஊழல் என்றிருக் கையில் அமுனுகமவின் பேச்சு கோமாளித்தனமாக இல்லையா?

முகமூடிக்கொள்ளைக்காரர்கள், சாதாரணக்கொள்ளைக்காரர்களை பிடிக்கப்போவது 'தொழில்சார்' போட்டிகாரணமாகத்தானே இருக்கமுடியும்!

ஒவ்வொரு கட்சியிலும் ஓரிருவர் இப்படி கோமாளித்தனம் காட்டும் பேர்வழிகளாக இருக்கவே செய்கின்றனர். ஆனால் சந்திரிகாவின் கட்சியில் ஓர் 'அணியே' இருக்கிறது. அமுனுகம அதில் ஒருவர் என்பதை அவர் தொடர்ந்து நிரூபித்தே வருகிறார்.

செங்குட்டுவன்

## மதவடி மயிலர்



செய்தி: கண் மருத்துவ பரிசோதனைக்காக வயோதிபர்களை ஏற்றிவந்த வாகனம் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டது.

*மயிலர்: உதைத்தான் கண் கெட்ட வேலை யெண்டு சொல்லுறது பாருங்கோ... மருத்துவ பரிசோதனைக்காகச் செல்லுறவையைக் கூட.... உவையின்ரை சோதனை நடவடிக்கைகள் இப்படிச் சிப்பிலியாட்டுது பாருங்கோ.... உதைச் சாதனை யெண்டு நினைச்சா கடைசிலை உவைக்கு வேதனை தான் மிஞ்சும் பாருங்கோ....*

செய்தி: ஐ.தே.கட்சி அமைச்சர்கள் மீது ஊழல்குற்றச் சாட்டுகள் இல்லை என்கிறார் அமைச்சர் ரவிகருணாநாயக்க...

*மயிலர்: தங்கடை ஊத்தையும் ஓட்டையும் தங்களுக்குத் தெரியாது பாருங்கோ....போன ஆட்சிக்காரரின்ரை ஊழல் பொட்டுக் கேடெல்லாம் ஒவ்வொண்டாய் இப்பதான் வெளிக்கிடுது... இனி இவையின்ரை பொட்டுக்கேடுகளை... அடுத்த ஆட்சிக்காரர் தான் வெளிச்சம் போட்டுக் காட்டுவினம்....*

செய்தி: புலிகளை அரசு வஞ்சிக்காது என்பதற்கு அமெரிக்கா, யப்பான் உத்தரவாதமளிக்குமா? இ.தொ.கா பிரதித் தலைவர் கேட்கிறார்...

*மயிலர்: சரியான கேள்விதான் பாருங்கோ.. உதவி அளிக்க துடிக்கிறவை, உத்தரவாதமளிக்கவும் வேணும்தானே.... நெடுக ஏமாந்த சோணகிரிகளாக தமிழ்மக்கள் இருக்க வேண்டும் எண்டு நினைச்சால்.... ஒண்டுஞ்சரிவராது பாருங்கோ....மாநாடு முக்கியம்தான்....ஆனா அதைவிட எங்கடை மக்களின்ரை எதிர்காலத்திற்கான உத்திரவாதம் மிக முக்கியம் பாருங்கோ...*

# மனித நேயத்திற்கு தடைவிதித்திருந்த போரும், அரசியலும்

தமிழரின் ஆன்ம உணர்வின் மனித நேயக்கரங்கள் கடந்த வாரம் ஓமந்தை தடைமுகாமையும் தாண்டி தென்னிலங்கை நோக்கி நீண்டது.

இந்தச் செய்தி எதை உணர்த்து கின்றது. வரலாற்றின் பாடங்களில் இதுவும் ஒரு புதிய பாடம் தான். ஆனால் தமிழர்களிற்கோ இதுவொன்றும் புதிய தல்லவே.

அகலத்திறக்க மறுத்த கதவுகளின் இடுக்கால் நுழைந்த தமிழர் கரங்கள் தென்னிலங்கையில் ஒரு மனப்புரட்சியை கிளறி விட்டுள்ளது.

அது இனம் மதம் மொழி கடந்து தென்னிலங்கையின் மையத்தில் புலிகள் சார்பான மாயையை கிழித்துவிட்டுள்ளது.

ஓங்கியெழுந்து வீசிய இயற்கையின் சீற்றத்தால் சீரழிந்து போன தென்னிலங்கை மாந்தர்களிற்கு புலிகள் வழங்கிய உதவும் பொருட்கள் அந்த

**அன்றைய குண்டு லொறிகளினால் தான் இன்றைய மனித நேய உதவிக்கான பாதைகளேதிறந்தன என்பதை எவர் எப்படி அவர்களுக்கு சொல்வார்கள். இதைத்தான் புலிகள் சொல்லியிருக்கிறார்கள்.**

மக்கள் பெற்ற எல்லா கொடைகளையும் விஞ்சிவிட்டது.

தடைகளையே தாண்டி வந்த புலிகள் இயற்கையின் சீற்றத்தால் தங்கள் அடிப்படைகளையே இழந்த மக்களிற்கு வழங்கிய உதவிப் பொருட்கள் மூலம் எல்லா அரசுகளினதும் நிறுவனங்களினதும் கொடைகளையும் தாண்டி விட்டனர்.

அளவுக்குள் அவை குறைவாக இருந்தாலும் உணர்வுகளால் அவற்றின் பெறுமதி அதிகமானது. இது எப்படிச் சாத்தியமானது. அசாத்தியங்களிற்கு மத்தியிலிருந்து சாத்தியங்களாக்கிய புலிகள் தெளிவாகவே தம் உதவிகள் மூலம் இதை உணர்த்தி விட்டார்கள்.

போருக்குள்ளிருந்த மக்களிடமிருந்து நீருக்குள்ளிருக்கும் மக்களிற்கு நீண்டிருக்கும் இந்த உதவிகள் எதை உணர்த்துகின்றது. மாறி வந்த அரசுகள் எல்லாமே தமிழர் மீது எத்தனை தடைகளை விதித்தன என எவரையும் கேட்டால் அவர்கள். உணவுத்தடையை சொல்வார்கள். மருத்துவத்தடையைச் சொல்வார்கள்.

ஆனால் புலிகளோ கடந்த வாரம் அரசுகள் தமிழர் மீது விதித்திருந்த இன்னுமொருதடையை புட்டுக்காட்டியிருக்கிறார்கள் அதுதான் தமிழரின் மனிதநேயத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையாகும்.

சமாதானத்தின் தரிசனத்தால் புலிகள் இந்தத்தடையை உடைத்திருக்கிறார்கள். தங்களின் உண்மை முகத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

சிங்களத்தின் பேரினவாத கருத்தூக்கிகள் போருக்காக தமிழர் தொடர்பாகவும். தம் சுய அரசியல் இலா

**சிறி.இந்திரகுமார்**

பங்களிற்காகவும். உருவாக்கியிருந்த கருத்துருவாக்கம் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு வழங்கப்பட்ட உதவிகள் மூலம் புலிகள் நொருக்கியிருக்கிறார்கள்.


பல லொறிகளில் கொண்டு செல்லப்பட்ட இந்த உதவிப்பொருட்களை தென்னிலங்கை வாசிகள் புலிகளின் லொறிகள் என சுட்டிக்காட்டினார்களாம்.

அவர்களிற்கு புலிகளின் லொறிகள் என்றவுடன் பல நினைவுகளைக் கொண்டுவந்திருக்கும்.

சமாதானத்திற்கு முன்பு புலிகளின் லொறிகள் என்றவுடன் குண்டு லொறிகள் தான் அவர்களின் நினைவுகளிற்குள் வந்திருக்கும்.

இதனை சில உத்திகள் மூலம் தென்னிலங்கை பத்திரிகைகள் அங்கு நினைவூட்டத்தவறவும் இல்லை.

ஆனால் எந்த நினைவுகளையூட்டினாலும் ஏன் அன்று குண்டு லொறிகளாக வந்தவை இன்று எப்படி உணவு லொறிகளாக வந்தன



என்ற கேள்வியையெழுப்பியிருக்கக் கூடும்.

அன்றைய குண்டு லொறிகளினால் தான் இன்றைய மனிதநேய உதவிக்கான பாதைகளேதிறந்தன என்பதை எவர் எப்படி அவர்களுக்கு சொல்வார்கள். இதைத்தான் புலிகள் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழர் மீதான எல்லா அனர்த்தங்களையும் எல்லா அழுத்தங்களையும் அன்று நீக்க தென்னிலங்கை அரசுகள் விட்டு வைத்திருந்த ஒரே மார்க்கம் அதுவொன்றுதான்

எல்லாவற்றையுமே போருக்கூடாகப் பார்த்தவர்களுக்கு போருக்கூடாகப் பதில் சொல்லவேண்டிய தேவை புலிகளிற்கு அன்று இருந்தது.

இன்று எல்லாவற்றையும் அரசியலிற்கூடாக பார்ப்பவர்களிற்கு புலிகள் அரசியலிற்கூடாக பதில் சொல்லியிருக்கிறார்கள்.

இதன் வெளிப்பாடுகளில் தான் தென்னிலங்கைக்கு உதவிப்பொருட்களுடன் சென்ற புலிகளிடம் புத்தபிக்குகள் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்திருந்தார்கள்.

அதாவது அரசியல்வாதிகள் தான் தங்கள் அரசியல் இலாபங்களிற்காக இந்த பகைமையை வளர்த்து வந்துள்ளார்கள் என்றும் நீங்கள் எங்களோடு பேசுங்கள் நாங்கள் மக்களிற்கு உண்மைகளை சொல்லுகின்றோம் என்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்த ஞான உபதேசங்கள். எவரின் பிள்ளைகளால் தமது சொத்துக்களையும் உயிர்களையும் தமது வாழ் விடங்களையும் இழந்து தவிக்கின்ற மக்களின் உரிமைகளிற்காக போராடுகின்றார்களோ அந்த மக்களின் பிரதிநிதிகளினூடாக சிங்களப் பெற்றோர்களையும் சென்றடைந்துள்ளது.

இந்த நிலையில் போருக்குள்ளிருந்து முழுமையாக வெளியில் வராத தமிழ் மக்களிற்கான புனர்வாழ்வும் புனரமைப்பும் புறக்கணிப்பும்இந்த மனித நேயத் திற்கூடாக எதைச்சொல்லும்.

தமிழர்கள் மீது சிங்கள அரசுகள் எல்லாமே மனித உரிமைச்சட் டங்கள் மூலமாகவே போர் செய்ததாக சொன்னார்கள்.


மனித உரிமைச்சட்டங்களின் மூலமாகவே அரசியலையும் செய்தார்களாம்.

ஆனால் புலிகளோ மனித நேயத்திற்கூடாக மனித உரிமைச் சட்டங்களை மதித்து செய்துள்ளார்கள்.

இந்த உண்மைகளிற்கூடாக எதுவரை தமிழர்களின் உரிமைகளை சிங்களதேசம் புரிந்துகொள்ளப்போகின்றது.

இவற்றிலிருந்து கற்றதனூடாக எப்படி தமிழர்களின் உரிமைகளை வழங்குகின்றது என்பதிலிருந்துதான் இலங்கையின் இன ஐக்கியம் சாத்தியப்படும்.

# மிதிவெடிகளுக்குள் யாழ்ப்பாணம்




ஒரு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி - சிறிலங்கா இராணுவ அதிகாரியுடன் உரையாடிக்கொண்டிருந்தார். அது யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் தொடர்பான விவகாரம். அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி குடாநாட்டில் 15லட்சம் மிதி வெடிகளை படையினர் புதைத்ததாகக் கூறினார். அதனை படையதிகாரி இல்லை எனக் கூறிவாதிட்டார். தனது தகவல் தான் உண்மை என அந்த அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதி வாதிட்டார். 11 லட்சம் மிதிவெடிகளைத்தான் நாங்கள் கொள்வனவு செய்தோம். அதற்கான சான்றிதழ்கள் எம்மிடம் உள்ளன. எஞ்சியவை யாருடையவை என எமக்குத்தெரியாது என்று அந்தப்படையதிகாரி கூறினார்.

இதன் மூலமே குடாநாட்டில் 11 லட்சம் மிதிவெடிகளை சிறிலங்காப் படையினர் புதைத்தனர் என்ற தகவல் வெளியானது. யாழ் குடாநாடு என்கின்ற போது அரச நிர்வாக எல்லையான எழுதுமட்டுவாளுடன் முடிவடையும் பகுதியல்ல. ஆனையிறவுடன் முடிவடையும் பரப்புக்கூட இல்லை.

யாழ்ப்பாண சிறிலங்கா இராணுவ வலயத்துக்குட்பட்ட கிளிநொச்சிவரை இந்த 11லட்சம் மிதிவெடிகள் புதைக்கப்பட்டன. ஆனையிறவை மையமாகக் கொண்ட சிறிலங்கா இராணுவத்தின் 54ஆம் டிவிசனின் ஆக்கிரமிப்புப்பரப்பு கிளிநொச்சி டிப்போச்சந்திவரை நீண்டிருந்தது.

இந்த எல்லைப்பரப்பு வரை இராணுவம் 11லட்சம் மிதிவெடிகளையும் புதைத்திருந்தது.

ஓயாத அலைகள் -03 மூலம் இராணுவ ஆதிக்கப்பகுதி எழுதுமட்டுவாளுக்குப்பின் தள்ளப்பட்டது . இதன் பின்னர் கிளிநொச்சி முதல் இத்தாவில் வரை வெடிபொருளகற்றும் பணி மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வடபகுதியில் ஜெயசிக்குறு, ரணகோச, ரிவிபல, வோட்டர்செட் நடவடிகைகள் மூலம் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பகுதிகளிலும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுவெடி பொருள்களை அகற்றி வருகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கண்ணி வெடிப்பிரிவினரிடம் பயிற்சிகளைப்பெற்றுக்கொண்டோரால் இந்த மனிதநேயகண்ணி வெடி அகற்றும்பிரிவு வெடி பொருட்களை அகற்றிவருகின்றது. இதுவரையும் 1லட்சத்து 77 ஆயிரத்து 575 வெடிபொருட்கள் மனிதநேய கண்ணிவெடிஅகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டுள்ளன. 1999 முதல் 2001 வரை 14628 வெடிபொருட்களும், 2002ல் 23884ம், 2003ல் இதுவரையும் 9077 வெடிபொருட்களும் அகற்றப்பட்டுள்ளன. வன்னியின் தென்பகுதியில் மணலாறு முதல் மன்னார் பாப்பாமோட்டை 150 கிலோமீற்றர் நீள முன்னைய இராணுவ முன்னரண்களிலும், உட்புறமுகாம்களின் அரண்களிலும் புதைக்கப்பட்ட வெடிபொருட்களை இப்பிரிவினர் அகற்ற மக்களை மீள் குடியமர உத்தரவாத மளிக்கின்றனர். இன்று நான்கு வலயங்களாகப்பிரிக்கப்பட்டு வெடிபொருளகற்றல் மேற்கொள்ளப்படுகின்றது.

மனிதநேயகண்ணி வெடிஅகற்றும் பிரிவுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவிகளை வழங்குகின்றது. பிரிட்டனின் MAG, நோர்வேயின் NPA, சுவிஸின் FSD ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் ECHO, நோர்வே, ஜப்பான், சுவிஸ்லாந்து அரசுகளின் நிதியுதவியுடன் இப்பொழுது மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுபணிகளை மேற்கொள்கின்றது. புரிந்துணர்வு உடன்பாட்டின் முன் இந்த நிறுவனங்களின் உதவி இல்லாமல் இந்த நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

முன்னர் இராணுவ ஆதிக்கத்தில் உள்ள யாழ்ப்பாணத்தில் சிம்பாவே குழு ஒன்று வெடிபொருட்களை அகற்றியது. மிதி வெடி ஒன்றிற்கு 15ஆயிரம் ரூபா செலவில் 675 மிதிவெடிகள் அக்குழுவினால் அகற்றப்பட்டன.

**த. திருநிலவன்**

இப்பொழுது. Halo Trust, fsd ஆகிய நிறுவனங்கள் களத்தில் இறங்கியுள்ளன. மறுபுறம் இராணுவமும் வெடிபொருட்களை அகற்றுவதாக கூறுகின்றது. ஆனால் இந்த நிறுவனங்கள், இராணுவம் வெடிபொருளகற்றியதாக கூறிய யாழ்ப்பாணப்பகுதிகளில் மக்கள் வெடிபொருட்களில் சிக்கி உடலுறுப்புகளை இழந்து வருகின்றனர்.

(15ம் பக்கம் பார்க்க... )

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யு மழை. - ஔவையார்

## ஒரு நினைவுக் குறிப்பு



# வி.ரி.ஏ.விஸ்வா என்ற
# ஒரு நட்சத்திரத்தின் மறைவு



**இவரில் நாங்கள் ஒரு கலைஞனை மட்டுமல்ல ஒரு மனிதனையும் கண்டோம். மனித ஆற்றலின் பல்வேறு வடிவங்களையும் கண்டோம். கால மாற்றங்களுக்கு தன் இறப்பு வரை தன்னை வளர்த்துக் கொண்டிருந்த ஒப்பற்ற கலைஞன் இவர்.**

இது கலையுலகின் நன்கு அறியப்பட்ட ஒரு பெயர்! ஒரு காலத்தில் ஒருதிரைப் படத்தின் கதாசிரியர் யார்? நெறியாளர் யார்? ஒளிப்பதிவாளர்யார்? என்றெல்லாம் எவருமே கவலைப்படுவதில்லை. சிவாஜி படமா, எம்.ஜீ.ஆர் படமா? இது தான் கேள்வி! ஆம்! நட்சத்திர அந்தஸ்து என்றநிலை கொடிகட்டிப் பறந்த காலம் அது. அந்தக் காலத்தில்தான் யாழ் குடாநாட்டில் வி.ரி.ஏ. விஸ்வாவின் பெயர் பிரபலம் பெற்றிருந்தது.

வி.ரி.ஏ.விஸ்வா வீதியால் போனால் கிடுகு வேலிகள் சரசரக்கும். "இது தானடி விஸ்வா" இது இளம் பெண்களின் குசுகுசுப்பு. மேடை நாடகங்களால் தனக்கென ஒரு நட்சத்திர அந்தஸ்தை விஸ்வா உருவாக்கியிருந்தமைக்கு இது ஒரு உதாரணம்.

அந்தக் காலங்களில் நாடகங்கள் என்றால் சினிமாப்படங்களின் பாணியில் இருக்கும். அல்லது புகழ் பெற்ற சினிமாப்படங்களை அப்படியே மேடையேற்றுவதாக இருக்கும். இதில் உள்ள சிக்கல் என்னவெனில் அந்தத் திரைப்படத்தின் தரத்திற்கு ஏற்றதாக அது மேடையேற்றப்படும் போது இல்லாவிடில் நாடகம் படுதோல்வி அடைந்து விடும். ஆனால் விஸ்வா இதில் என்றுமே தோல்வி அடைந்ததில்லை. இதனால் தானோ என்னவோ இவரை மக்கள் 'ஈழத்துசிவாஜி' என அக் காலத்தில் அழைத்தார்கள்.

1990ம் ஆண்டு காலப்பகுதியில் என்னுடைய நாடகங்களில் 'ரகு' என்ற ஒரு நடிகன் தான் பிரதான பாத்திரத்தில் நடிப்பான். இவனுக்கு நான் என்றுமே நடிப்புச் சொல்லிக் கொடுத்ததில்லை. பாத்திரத்தின் தன்மையை மட்டும் விளங்கப்படுத்தினால் போதும். என் கற்பனையை அப்படியே மேடையில் கொண்டு வந்துவிடுவான். அவனுக்கு அண்மையில் அவனின் நெறியாள்கைக்காகவும், நடிப்புக்காகவும் எமது தேசியத்தலைவர் அவர்கள் பாராட்டும், பரிசும் வழங்கியிருந்தார்.

அவனை அந்நாட்களில் பாராட் டும் போதெல்லாம் அவன் சொல்லுவான், "இதெல்லாம் என்ரை குரு விஸ்வாவாலை எனக்கு வந்த கெட்டித்தனம்"

அவனே ஒரு நாள் அந்த விஸ்வாவை என்னிடம் அழைத்து வந்தான். அன்று நான் ஒரு தன்னடக்கமுள்ள, ஒரு அமைதியான ஆனால் ஆழமான ஒரு மனிதனைச் சந்தித்தேன்.

அந்த மனிதன் வெகு விரைவிலேயே என் நண்பராகினார். அதன்பின்புதான் அவரின் ஆற்றலை

**நா.யோகேந்திரநாதன்**

என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது.

அவர் ஒரு நடிகனாக மட்டும் திகழவில்லை. ஒரு நெறியாளனாக, ஒரு நாடகப் பிரதி எழுதுபவராக, ஒரு வீடியோ படத்தயாரிப்பாளராக, ஒரு படத் தொகுப்பாளராக, ஒரு வானொலிக் கலைஞராக, ஒரு வானொலி நிகழ்ச்சித் தயாரிப் பாளராக, ஒரு மொழி பெயர்ப்புப் படங்களுக்கு குரல் கொடுப்பவராக என இவர் கலைத் துறையில் பல முகங்களைக் காட்டி நின்றார். ஆங்கிலப் படங்கள் மொழி மாற்றம் செய்யப்படும் போது குரல் கொடுப்பது அவ்வளவு இலகுவானதல்ல. மூலப் படத்தில் நடிக்கும் நடிகனின் அதே பாவத்தைக் குரலில் கொண்டுவர வேண்டும். அதே வேளையில் வாயசைவுக்குப் பொருத்தமாக அமையவும் வேண்டும். இந்த மிகவும் சிரமமான காரியத்தைச் சுலபமாகச் செய்யும் ஆற்றல் இவரிடமுண்டு.

இத்துறையிலும் நான் இவருடன் இணைந்து பங்காற்றியிருப்பினும், முழுமையாக நானும் இவரும் ஒன்றாகச் செயற்பட்டது புலிகளின் குரல் வானொலியில்தான். 'தாமரைத் தடாகம்' நிகழ்ச்சியில் வரும் 'குரு - சிஷ்யன்' மறக்கக் கூடியவர்களா? ஆழமான அரசியலை மென்மையான நகைச்சுவையினூடாகத் தருவதில் அவரின் திறமையே தனியானது தான். இவர் இதை வீதி நாடகமாகப் பல இடங்களிலும் அரங்கம் கண்டு பாராட்டுகளைப் பெற்றுள்ளார்.

'உயிர்த்தெழுகை' வானொலி நாடக வரலாற்றிலேயே பெருமளவு மக்களைத் தன்வசம் இழுத்த நாடகம் இது. இதில் வரும் 'சரவணையப்பு' என்ற பாத்திரத்தை எவரும் இலகுவில் மறந்து விட முடியாது. "டேய்... நாங்கள் நிக்கிற மிருகத்தைக் கலைச்சு ஓட விட்டிட்டுச் சுட்டுத்தான்ரா பழக்கம்," என்ற அந்த சரவணையப்புவின் முழக்கத்தை யாரால் மறக்க முடியும். உயர்ந்த தோற்றம், ஆஜானுபாகுவான உடல், நிமிர்ந்த நடை, ஆளுமை பொங்கும் பார்வை, எதற்குமே அஞ்சாத துணிவு, உள்ளூர இழையோடும் அன்பு. இப்படியான ஒரு சரவணையப்புவின் தோற்றத்தைத் தன் குரலினாலேயே வானொலி ரசிகர்களின் கண்களில் கொண்டு வந்த அந்தப் பெருமை விஸ்வாவுக்கு மட்டுமே. வானொலி நடிப்பின் முழுமை அவரில் வெளிப்பட்டது என்றே சொல்ல வேண்டும்.

'சாம்பல் பறவை' என்ற தொடர் நாடகத்தில் ஒரு பாத்திரம். அந்தப் பாத்திரம் வந்தால் ஏனைய பாத்திரங்களுக்கு மட்டுமல்ல ரசிகர்களுக்கும் ஒரே குழப்பம். நான் அவ ருக்கு அப்பாத்திரம் பற்றி விளங்கப் படுத்திக் கொண்டிருக்கும் போது ரசிகர்களை குழப்பும் வகையில் ஒரு அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரிக்க வேண் டுமென்றேன். அன்று மாலை என்னை ஒருவரிடம் கூட்டிச் சென்றார். அவரிடம் கதைத்து விட்டுத்திரும்பிய போது சொன்னேன், "அவர் சிரிக்கிற அந்தச்சிரிப்பு பொருத்தமானது, அவர் அதே சிரிப்பை சிரித்து விட்டுச் சொன்னார்." "அதுக்காகத்தான் உங்களை அவரிட்டைக் கூட்டி வந்தனான்."

அன்று ஒன்றை என்னால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந் தது. அவர் நடிப்புப்பயின்ற பல் கலைக்கழகம் மக்கள் தான். அதனால் தான் இவர் ஆற்றல்களின் உச்சத்தை எட்டித்தொட முடிந் தது.

புலிகளின் குரல் வானொலியின் புதிய முற்பாச்சல்களில் இவர் முக்கிய பங்கு வகித்துள்ளார். புலிகளின் குரலின் சிங்கள சேவைக்கு வாசல் கதவைத் திறந்துவிட்டவர் இவர்தான். சில மாதங்கள் தன்னந்தனியாக சிங்களச் செய்திகள் உட்பட இவர் இந்த நிகழ்ச்சியைத் திறம்பட நடத்திப் பல பாராட்டுகள் பெற்றவர்.

இது மட்டுமல்ல! இவர் தமிழீழ வானொலியிலும் தன் இறுதி நாட்கள் வரை 'பல்சுவைமாலை', 'போரோசை' ஆகிய இரு நிகழ்ச்சிகளைத் தயாரித்து வந்தார். இந் நிகழ்ச்சிகள் இவரின் அரசியல் அறிவினதும், தேடலினதும் வெளிப்பாடாக விளங்கின.

இவரிடம் உள்ள, எம்மில் பலரிடம் இல்லாத, ஆனால் இருக்க வேண்டிய ஒரு சிறப்பம்சத்தை இங்கே குறிப்பிடாமல் விடமுடியாது. அந்தந்த வேலையை அந்தந்த நேரத்துக்குச் செய்வது. நாடக ஒத்திகையென்றாலென்ன, ஒலிப் பதிவு என்றாலென்ன இவர் நேரம் தவறுவதேயில்லை.

இவரில் நாங்கள் ஒரு கலைஞனை மட்டுமல்ல ஒரு மனிதனையும் கண்டோம். மனித ஆற்றலின் பல்வேறு வடிவங்களையும் கண்டோம். காலமாற்றங்களுக்கு தன் இறப்பு வரை தன்னை வளர்த்துக் கொண்டிருந்த ஒப்பற்ற கலைஞன் இவர்.

இவரின் பிரிவு துயரமானது ஈடு செய்ய முடியாதது!

எனினும் இவரின் இறப்பு இவருக்கு ஒப்பற்ற பெருமையை வழங்கிவிட்டது. ஆம்! இவர் எமது தேசியத் தலைவரால் நாட்டுப்பற்றாளராகக் கௌரவிக்கப்பட்டார்.

தமிழீழத்தின் கலையுலக வரலாற்றில் இவருக்கென ஒரு தனியிடம் என்றும் இருக்கும். இவரின் மறைவு இடையறாது ஒளி வீசிய ஒரு நட்சத்திரத்தின் மறைவு. ●



# உலகை அச்சுறுத்தும் சார்ஸ்



சார்ஸ் என்பது எச்.எம்.பி.வி என்ற கொறனொ வகை வைரசினால் ஏற்படும் சுவாசத் தொற்று நோயாகும். இந்த நோயின் அறிகுறிகளை Severe Acute Respiratory Syndrome என்றும் அதிலுள்ள நான்கு சொற்களின் முதல் எழுத்துக்களான S.A.R.S. என்பவற்றை ஒன்று சேர்த்து சார்ஸ் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் நிமோனியாத் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். இவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் மரணத்தைத் தழுவுகின்றனர்.

சார்ஸ் நோயின் ஆரம்ப அறிகுறிகள் இதர கடும்சுவாசத் தொற்றுநோய் களை ஒத்திருக் கின்றன. கடுமையான காய்ச்சல், வரட்சியான இருமல், மூச்செடுப்பதில் கடினம் முட்டுப்படுதல் என்பன இருக்கும், இப்பிரதான அறிகு றிகளுடன் தலையிடி, தேக உழைவு, சோர்வு பசியின்மை தடுமாற்றம் வயிற்றுப்போக்கு போன்றவையும் ஏற்படலாம்.

நோயாளியின் 'எக்ஸ், கதிர் படப்பிடிப்பில் மார்பில் நிமோனியா அறிகுறிகளை அவதானிக்க முடியும். மேலும் இரத்தப் பரிசோதனையில் சார்ஸ் நோயைத் தோற்று விக்கும் வைரசுக்கு எதிரான பிறபொருள் எதிரியான இரசாயனப் பதார்த்தத்தை இனம் காண முடியும். இதனாலேயே இந்நோய் உறுதி செய்யப்படுகின்றது.

இது ஒரு வைரஸ் நோயாக இருப்பதால் நோய்க்கு எதிரான மருந்துகள் இல்லை. நோயாளியை பராமரிப்பதன் மூலமும் நோய் அறிகுறிகளுக்கான சிகிச்சை அளிப்பதன் மூலமே நோயாளரைக் காப்பாற்ற முடியும். இதனாலேயே அதிக மரணங்கள் ஏற்பட அதிக வாய்ப்பு இருக்கின்றது.

நோய் காற்றின் மூலம் பரவக்கூடியது. நோயாளியின் சுவாசத்தோடு வெளியேறும் தும்மலினாலும் நேரிடையான தொடர்பினாலும் இது பரவக் கூடிய தாதலினால் நோயாளர்களைத் தனிமைப்படுத்தி வைத்திருப்பதன் மூலம் நோய் பரவலைத் தடுக்கலாம். வாய், மூக்கு கவசம் அணிவதன் மூலம்

**டாக்டர் ச. முருகானந்தன்**

நோய்க் கிருமி கள் பரவுவதைத் தவிர்க்கலாம்.

இதன் நோயரும்பு காலம் 2முதல் 10 நாட்களாகும். இதனால் கிருமித்தொற்றுக்குள்ளானவர்கள் விரைவில் நோய்வாய்ப்படுவர். நோய்த் தொற்று ஏற்பட்டவர்களில் 10வீத மானவர்களுக்கு நிமோனியா ஏற்படுகிறது. 4வீதமானவர்கள் மரணத்தைத் தழுவுகின்றனர். சீனாவில் தோன்றி வியட்னாமில் இனம் காணப்பட்டு இன்று உலகில் 25 நாடுகளில் புகுந்து விட்ட இந்த நோய் பரவுதலைக் கட்டுப்படுத்தாவிட்டால் நித்திய நோயாக இதுவும் மாறிவிடலாம்.

**நோய் பரவலைத் தடுக்கும் முறைகள்.**

1) நோயாளியைத் தனிமைப் படுத்தி சிகிச்சையளித்தல்.

02) நோயாளியுடன் தொடர்பு கொள்வோர் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல்.

03) மாஸ்க் (mask) வாய் மூக்குக் கவசம் அணிதல்.

04) சார்ஸ் நோயுள்ள பிரதேசங்களுக்கு பயணம் செய்யாது விடல்.

05)சார்ஸ் உள்ள நாட்டிலிருந்து வருபவர்களை பரிசோதித்து நோயற்றவர் என்று உறுதிப் படுத்திக்கொண்டு நாட்டிற்குள் அனுமதித்தல்

06) சுவாசத்தொற்று ஏற்படும் நோயாளர்கள் சென்று வந்த பிரதேங்களை அறிந்து சந்தேகமெனின் இரத்தப் பரிசோதனை செய்தல்.



தொடர்கதை

அத்தியாயம்-11

# இடம் பெயர்ந்தவன்

ஆங்கில மூலம் பிளானறி ஓ கொனரின்

தமிழில் சு.மகேந்திரன்

எனக் கூறிக்கொண்டு ஓரக் கண்களால் அவற்றைப் பார்த்தார்.

மிஸிஸ் மக்கின்ரயர் வாயைக் கோணினாள்.

"கௌசக் குடும்பத்தினர் விலகிவிடுவார்கள் என நினைக்கிறீர்களா?" அவர்கள் சிக்கா கோவுக்கோ அல்லது அது போன்ற இடத்திற்கோ போய்விடுவார்களா? என மிஸிஸ் மக்கின்ரயர் கேட்டாள்.

"அவர்கள் அதை ஏன் இப்போது செய்யப்போகிறார்கள்" என்றார் பாதிரியார்.

"காசுக்காகத்தான" என்றாள் அவள்.

"அப்படியாயின் இன்னும் சிறிது அதிகமாக கொடுங்களேன்" என்று சிரத்தை எதுவுமின்றி மேலும் அவர்களும் வாழ்க்கையைக் கொண்டு போகத்தானே வேண்டும் என்று கூறினார்.

"அப்படிச் செய்யத்தான் வேண்டும். அதற்கு இங்குள்ள சிலரை துரத்தி ஆகவேண்டும்" என்றாள் திருமதி மக்கின்ரயர்.

அவள் கூறுவதை கேட்பதைவிட வான்கோழிகளில் அதிக அக்கறை செலுத்தியபடி "சோட்லி குடும்பத்தவர்கள் திருப்திதரும் வகையில் நடந்து கொள்கிறார்களா?"

என்றார் பாதிரியார்.

"சென்ற மாதம் மட்டும் ஐந்து தடவைகள் சோட்லி தொழுவத்தில் புகைபிடிக்கக் கண்டேன்" என்றாள் திருமதி மக்கின்ரயர்.

"நீகிரோக்கள் எப்படி? சமாளிக்கக் கூடியதாக உள்ளதா?"

"அவர்கள் எப்போதும் களவும் பொய்யுமாக இருக்கிறார்கள். என்நேரமும் அவர்களை கண்காணித்தபடியே இருக்க வேண்டியுள்ளது."

"இஸ்க் இஸ்க்" என்றார் பாதிரியார். "அப்படியென்றால் யாரை விலக்க உத்தேசித்துள்ளீர்கள" "நான் சோட்லி குடும்பத்திற்கு இங்கிருந்து விலகிக் கொள்வதற்கு ஒரு மாதமுன்னறிவித்தலை நாளை கொடுக்கப் போகிறேன்" என்றாள் திருமதி மக்கின்ரயர். பாதிரியார் அவள் கூறுவதை கூர்ந்து கேட்பது போல் தெரியவில்லை. அவர் கூட்டுக்குள் கையை விட்டு கையை அங்குமிங்கும் ஆட்டிக்கொண்டிருந்தார்.

திறந்திருந்த கோழித்தீன் சாக்கொன்றின்மேல் ஏறி இருந்து கொண்டு தனது உணர்வை இழந்த பெருவிரலால் கோழித்தீனை திருமதி சோட்லி அளைந்து கொண்டிருந்தாள். அதிலிருந்து கோழித்தீன் புழுதி கிளம்பி அவளைச் சூழ்ந்து கொண்டது. தனது அதிஅற்புதமான கண்டுபிடிப்பைப் பற்றி தெரியப் படுத்திக் கொண்டிருந்த அந்த மனிதனின் உருவத்தை தாங்கிக் கொண்டிருந்த கலண்டர் இருந்த சுவரை பார்த்துக் கொண்டிருந்தாள். அவனது உருவம் அவளது கண்ணுக்குத் தெரியவில்லை. அவள் அப்படியொரு கலண்டர் இருக்கிறது என்பது தெரியாத ஒரு நிலையில், எங்கோ முன் நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தாள். பின்பு அவள் எழுந்து தனது வீட்டுக்குள் ஓடினாள். அவளது முகம் எரிமலையின் நிறத்துக்கு சற்று சமனாக இருந்தது.

எல்லா லாச்சிகளையும் திறந்தாள். கட்டிலுக்கு அடியில் நெளிந்தும் அமுங்கியும் கிடந்த சூட்கேசுகளையும், பெட்டிகளையும் விசையாக வெளியே எடுத்தாள். இவற்றை எல்லாம் செய்யும் பொழுது அவள் சிறிது ஓய்வு எடுக்கவோ தொப்பியைக் கழற்றவோ இல்லை. தனது இரு பெண்களையும் இவ்வகை வேலைகளில் அமர்த்தினாள். சோட்லி உள்ளே வந்ததும் அவனை அவள் முகம் கொடுத்தும் பார்க்கவில்லை. வேலைகளை ஒருகையால் செய்து கொண்டு மறுகையால் பாவனை செய்தபடி, "பின்கதவால் காரை கொண்டு வாருங்கள" என்று மட்டும் கூறினாள். "நீங்கள் வெளியேற்றப் படும் வரைகாத்திருக்கக்கூடாது"

தனது வாழ்வில், அவளது சர்வவல்லமையில் சோட்லி ஒரு போதும் சந்தேகம் அடைந்தவன் அல்ல.

அவன் முழுநிலைமையையும் அரைச் செக்கனில் அறிந்து கொண்டான். கசப்பான கோபப் பார்வையுடன் காரை ஓட்டி வர வீட்டின் பின்பகுதிக்கு உடனே அங்கிருந்து வெளியேறினான்.

அவர்கள் இரண்டு இரும்புக் கட்டில்களையும் காரின் மேல் ஏற்றி னார்கள். இருந்த இரண்டு சுழல் கதிரைகளும் அக் கட்டில்களுக்குக் கீழே போடப்பட்டன. மெத்தைகளை கதிரைகளுக்கிடையில் சுருட்டி வைத்தார்கள். கோழிக்குஞ்சுகளைக் கொண்ட கூடை ஒன்று அவற்றின் மேல் ஏறியது. ஒரு சிறிய இடம் அவர்களது சிறிய பெண்களாகிய அனிமோட்டிற்கும் சாச்மாக் ஆகியோருக்காக ஒதுக்கப்பட்டது. அந்தப்பின் நேரமும் இரவின் அரைவாசியையும் அவற்றைச் செய்யப் பிடித்தது. இங்கு இன்னொரு தரம் சோட்லி பால் கறக்கும் சாதனத்தை மாடுகளில் பொருத்தக்கூடாது என்பதற்காக காலை நான்கு மணிக்கு முன்னரே அங்கிருந்து புறப்பட்டு விட வேண்டும் என்று திருமதி சோட்லி முடிவெடுத்திருந்தாள்.

(தொடரும்...)



திருமதி சோட்லியின் ஒரு கால் பொருட்கள் கொண்ட பெட்டியின் மேல் இருந்தது. அதனால் அவளது தொடை வயிற்றுக்குள் அமிழ்ந்து போனது போலாயிற்று. சோட்லியின் முழங்கை அவளது மூக்கிற்கு அருகிலும் முன்சீற்றின் மேலாகக் கிடந்த பின்சீற்றில் இருந்த மகள் ஒருத்தியின் வெறுங்கால்கள் அவளது காதைத் தொடும்வகையிலும் இருந்தன.

## பன்முகம் -22

# சிலம்புச்சர்ச்சை

**கண்ணகியாள்** தெய்வமாக கோயில் கொண்டிருக்கும் கிராமம் வற்றாப்பளை. கண்ணகியின் பத்தாவது தரிப்பிடமே இக்கிராமம் என்பதால் இவ்விடத்தின் காரணப்பெயர் பத்தாம்பளை என்று வழங்கிற்று என்றும் நாளடைவில் பத்தாம்பளை திரிபடைந்து வற்றாப்பளை ஆயிற்று என்பது செவிவழிக் கூற்று.


3ஆண்டுகளுக்கு முன்னர் காலஞ்சென்ற கவிஞர் வற்றாப்பளையூர் தீட்சண்யன் இராணுவத்தின் எறிகணைக்கு இலக்காகி ஒரு காலை இழந்தவர். பெரும்பாலும் வீட்டை விட்டே வெளியேறாமல் இருக்கும் அவர் ஆகக்கூடிய தூரம் தன் வீட்டுக்கு முன்புறம் உள்ள வேலியோடு வீதிப் பக்கம் இருந்த மதகின் மேல் வந்து மாலை வேளையில் உட்கார்ந்து கொள்வார். அவரைச் சுற்றிலும் ஒன்றிரண்டு நண்பர்கள் உட்கார்ந்துகொண்டு ஏதாவது இலக்கியச்சர்ச்சையில் ஈடுபட்டிருப்பார்கள். ஆங்கிலத்திலும் புலமை மிக்கவராகையால் பல்வேறுபட்ட புதினங்களை, கருத்துக்களை கேட்டறியும் பொருட்டு நண்பர்கள் போவதுண்டு. அந்த மதகை அவர் நகைச்சுவையாக 'சங்கப்பலகை' என்று கூறுவார்.

கவிஞர் என்ற வகையில் எனக்கும் அவருக்கும் இடையில் மலர்ந்த உறவு நாளடைவில் நெருங்கிய நண்பர் என்று கூறும் வகையில் அமைந்துவிட்டது. அவரும் நானும் சிலவேளையில் இலக்கியச்சர்ச்சைகளில் ஈடுபடுவதுண்டு. அப்படி இடம்பெற்ற சர்ச்சைகளுள் கண்ணகி பற்றிய விடயமும் ஒன்று.

முள்ளியவளையில் ஆண்டு தோறும் அரங்கேற்றப்படும் கோவலன் ஆட்டக்கூத்து கண்ணகியை பத்தினித்தெய்வமாக காட்டவேண்டும் என்பதற்காக எழுதப்பட்டதாகும். அதற்காக மாதவியை கொடியவிலைமாதாக உருவகித்திருப்பதில் எனக்கு உடன்பாடில்லை. ஏனெனில் கூத்தில் கூறப்படும் மாதவியாக இருந்திருப்பின் கோவலனின் நிராகரிப்புக்குப்பின் அவள் இன்னுமொரு துணையை நாடியிருக்கலாம். ஆனால் அவனையே கண்கண்ட தெய்வமாக வணங்கியவள், அவர்களது அன்பின் சின்னமாகிய மணிமேகலையையும் விலைமாதாக வளர்த்திருக்கமுடியும். ஆனால் ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற மரபை மீறிய கோவலன் மாதிரி அல்லாமல் ஒருத்திக்கு ஒருத்தனே அதிலும் மாதவிக்கு கோவலன் ஒருத்தனே என்ற உத்தமியாகவே மாதவி வாழுகின்றாள்.

அப்படி நெறிதவறிப்போன கோவலன் தனக்கே துரோகம் இழைத்த கோவலன், ஏகபத்தினி விரதனாக வாழாத கோவலன், தற்செயலாக, தவறுதலாக பாண்டிய மன்னனால் கொலை செய்யப்படுகின்றான்.

ஆனால் தான் நீதி பிழைத்துவிட்டதை அறிந்த மறுகணம் உயிர்விடுகின்றான். அதனைத் தொடர்ந்து பாண்டியன் மனைவியாக கோப்பெருந்தேவ[illegible] கணவன் மீது விழுந்து உயிரை மாய்த்துவிடுகின்றாள். அப்படியிருந்தும் முறைதவறிய கணவனுக்காக கண்ணகி மதுரையை எரித்தாளாம் என்பது எப்படி நீதியாகும் என்று நான் வாதிடுவேன்.



கவிஞரும் முன் வினைப்பயன் "அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்று'' என என்றெல்லாம் காரணம் கூறுவார். ஆயினும் கவிஞரின் விளக்கங்களில் எனக்கு திருப்தி ஏற்படுவதில்லை. எனக்கு எழுந்த இந்தச்சந்தேகம் என் போன்ற சமானியர்களுக்கு மட்டுமல்ல. பேரறிஞர்களுக்கும் இருந்தது என்பதை அண்மையில் முல்லைமணி அவர்கள் வெளியிட்ட "வன்னியியற் சிந்தனைகள்" மூலம் அறிந்து கொண்டேன்.

பண்டிதர் வ.சு. இராசஜயனார் பற்றிய கட்டுரையில் மேற்படி விடயத்தை முல்லைமணி அவர்கள் கூறுகின்றார்.

"அக்காலத்தில் அறிஞர்கள் மத்தியில் சிலப்பதிகாரம் பற்றிய சர்ச்சை எழுந்தது. நெடுங்காலமாக அறியப்படாதிருந்த சிலப்பதிகாரத்தை மகா மகோ உபாத்தியாயர் உ.வே. சாமிநாதஐயர் அவர்கள் அச்சு வாகனம் ஏற்றினார். பாரதம், இராமாயணம் போன்றவை வடநாட்டுக் கதைகள். சிலப்பதிகாரம் வணிகர்குலத்துக் கண்ணகியைப் போற்றும் தமிழ் நாட்டுக்கதை. இதனாலும் இளங்கோ அடிகளின் கவிச்சிறப்பாலும் குடிமக்கள் காப்பியம் என்று போற்றப்பட்டது. மகாகவி பாரதியார்

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகார
மென்றோர் மணி
ஆரம்படைத்த தமிழ்நாடு"

எனப்பாடியுள்ளார்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களுக்கு இது உடன்பாடில்லை. சிலப்பதிகாரம் கவிச் சிறப்புடையது என ஏற்றுக் கொண்ட அவர் அக்காப்பியம் பொருள் பிறள்வுடையது எனக் கூறினார். பாண்டியன் அவையிலே தனது கணவன் கள்வன் அல்லன் என நிரூபிக்கப்பட்டதும் பாண்டியன் தனது தவறை உணர்ந்து


"யானே அரசன் யானே கள்வன்" எனக்கூறி அந்த இடத்திலேயே இறக்கிறான். பாண்டிமாதேவியும் கணவனைத்தொடர்ந்து சாவைத் தழுவிக்கொள்கிறாள். கணவன் மரணத்தின் பின் வாழ்ந்தகண்ணகியா? கணவன் இறப்பைத் தாங்காது உயிர்துறந்த கோப் பெருந்தேவியா சிறந்தவர்? என இளங்கோ பிறிதொரு இடத்தில் வினா எழுப்புகின்றார். பாண்டியன் தனது தவறை உணர்ந்து அதற்குப் பிராயச்சித்தமாக உயிர் நீத்த பின்னும் கண்ணகி மதுரையை எரிக்கத்தான் வேண்டுமா? இது கற்புடைய மங்கை ஒருத்திக்கு அழகா? என்பது பண்டிதமணி எழுப்பிய வினா இதனால் "சிலப்பதிகாரத்திற்கு செவியைக் கொடுப்போம்

நெஞ்சைக்கொடுக்க தயாராக இல்லை"

எனக்கூறினார் பண்டிதர் வ.சு. ஐயனார் இப்பதத்தினை எதிர்த்து வாதிட்டார். சிலப்பதிகாரம் நெஞ்சைஅள்ளும் காப்பியம் தான் எனப்பலகாரணம் காட்டி ஆணித்தரமாக நிறுவினார் என்கிறார் திரு.முல்லைமணி அவர்கள்.

— நாவண்ணன் —

உறுதியான உழைப்பே, உண்மையான வழிபாடு. - தாமஸ் கார்லைல்



## சிறுகதை

# இப்படிக்கு காதலுடன் கருவி...



மா. பரமேஸ்வரன்

அவனை ஸ்பரிசித்து இன்றுடன் இருமாதங்கள் கடக்கின்றன.

அவன் பிரிவுத்துயரை என்னால் தாங்க முடியவில்லை. இது சமாதானத்தின் காலமென்பதால் சாத்தப்பட்ட நிலையில் நான் இருக்கின்றேன். நெஞ்சை உருக்கும் இந்தப்பிரிவை சொல்லால் வடித்து விட முடியாது. என் தோழியரிடம் கூட தூதனுப்ப முடியாத ஒரு முட்டுக் கட்டைக்குள் மூழ்கியுள்ளது என் பெருமூச்சு.

இந்தஏழெட்டு வருடங்களில் இப்படியொரு நீடிய பிரிவு நிகழ்ந்ததேயில்லை. நானும் நிம்மதி கெட்டதில்லை.

இந்தப் பிரிவு உறுதியாகி விட்ட அந்தப்பொழுதில் அவன் என்னிடம் ஓடோடி வந்தான். அவன் கண்களில் தான் எத்தனை துளிகள். நான் கலங்கிப்போனேன். வழமை போலவே என்னால் பேச முடியவில்லை. ஆனால் என் மௌனத்தை சுரம் பிரிக்கும் சக்தி அவனுக்கிருந்தது. என்னைப்பற்றிப்பிடித்து தன் கையில் ஏந்திக்கொண்டான். நான் மெய் சிலிர்த்துப்போனேன். என்னை முத்தத்தால் நனைத்தெடுத்தான். உச்சந்தலையை பரிவோடு வருடி தனக்குள் ஏதேதோ பேசிக் கொண்டான்.

எனக்குள்ளும் சில வினாக்கள்.

இவனுக்கு என்ன நடந்தது? ஏனிப்படி இன்று நடந்து கொள்கின்றான். சத்ஜெய நடவடிக்கையால் தன் தாயார் எதிரிகளின் எறிகணை வீச்சில் இறந்த போதும் கூட களத்தில் நின்று செய்தியறிந்தவன் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுது விட்டு கடமையில் கண்ணாயிருந்தவன் தானே இவன். இன்று மட்டுமேன் இவன் இப்படி...?

ஓ...தன் தாயைவிட இவன் என்னை நேசிக்கின்றான். இவன் எத்தனை உயர்ந்தவன். அவன் கண்ணீர் என்னை அணுஅணுவாய் பாதித்தது. காரணம் கேட்கும் திராணி தான் எனக்கிருக்கவில்லை.

அன்று முழுதும் அவன் அணைப்போடே கழிந்தது. அதிகாலை எழுந்த என்னன்பன் ஏதோ ஒரு தைலத்தால் என்னை நனைத்து என்னுடம்பின் அழுக்குகளைப் போக்கினான்... எனக்கு பல்துலக்கி வாயை சுத்தம் செய்தான். என் மூட்டுகளுக்கெல்லாம் எண்ணை தேய்த்து நெட்டி முறித்தான். என் வயிற்றுப் பகுதியை பரிவோடு வருடி சோதித்துப் பார்த்தான். சுமார் ஒரு மணிநேரம் என்னை அழகு படுத்தியதிலேயே அவன் ஆயுள் கரைந்தது.

இப்போது என்னைப் பார்க்கையில் எனக்கேயொரு பிரமிப்பு. இது புதியதொரு பிறவியின் பிறப்பு. சற்று நேரம் என் அழகினை அள்ளிப் பருகிய அவன்விழிகள் ஸ்தம்பித்துப் போயின. அவன் எதனையோ வெறித்துக் கொண்டிருந்தான். அவன் கரத்தில் நான் அடைக்கலமாகியிருந்தேன். அந்த அணைப்பில் அவனது சிறு நடுக்கத்தை உணர்ந்தேன்.

திடீரென என் மூச்சையடக்கும் வகையில் இழுத்தணைத்த அவன் மீண்டும் அழலானான். நாமிருவரும் இணைந்திருந்த இந்த ஏழெட்டு வருட வாழ்வில் எத்தனை எத்தனை இறுக்கமான இடையூறுகளைச் சந்தித்துள்ளோம். அத்தனை நொடியிலும் அசையாத அவனுறுதி என் முன்பு இப்போது அழிந்து கொண்டுள்ளதா?

அழுத அவன் விழி நிலைகுத்தியது. அவனது எழுகையில் ஒரு நிமிர்விருந்தது. எனக்கு அவசர அவசரமாய் ஆடைகளை அணிவித்து துணியால் போர்த்தி மூடினான்.

எங்கள் பிரிவு நிச்சயமாகி விட்டது.

இனி எப்போது வருவாய் என் அன்பனே...!

நான் கேட்கத்தான் நினைத்தேன் என் வார்த்தைகள் சூடாய் இருப்பதால் என்னவோ அது எனக்குள்ளேயே உறங்கிப் போனது.

இப்போதெல்லாம் பிரிவைத் தாங்க முடியாத என் நினைவுகள் பின்னோக்கிப் பயணிப்பது பழக்கமாகி விட்டது.

சூரியக்கதிர் முடிந்து வன்னியோடு மக்கள் வாழத் தலைப்பட்ட காலமது. வன்னிக்காட்டின் ஒரு பொட்டல் வெளியின் ஓரத்தில் தான் நாங்கள் முதல் முதலாய்ச் சந்தித்துக் கொண்டோம். அது வாழ் நாளில் மறக்க முடியாத அனுபவம். நாங்கள் கரம் பற்றும் அந்நிகழ்வு பெருவிழாவாக இருந்தது. நாங்கள் இணைந்த போது பெரியோர்களும் அவனது நண்பர்களும் கைதட்டி ஆரவாரம் செய்து எம்மை உற்சாகப் படுத்தினர்.

கண்ணுக்குத்தெரியாத மாவீரச் செல்வங்கள் எம்மீது பூமாரி பொழிந்து வாழ்த்துவதாய் நாமுணர்ந்தோம். அத்தனை பேர் முன்னிலும் அவன் அணைத்தள்ளி என்னை உச்சிமுகர்ந்த போது நான் அத்வைதம் அடைந்தேன்.

நாங்கள் தேசத்தைக் காக்கும் பொருட்டு பெரியோர்கள் நண்பர்கள் மத்தியில் பிரமாணம் எடுத்துக்கொண்டோம்.

எனக்குத்தெரியும் நாம் பயணிக்கப்போகும் வாழ்க்கை பல சவால்கள், கடினங்கள், நிறைந்ததென்று. ஏன் அவனும் இதை நன்குணர்ந்தவன். எம்மிணைவினை இம்சிக்கும், எதிர்க்கும் எதிரிகள் பலர் எப்போதும் போல் இருக்கின்றனர். இருந்தும் விரும்பியேற்றுக்கொண்ட இவ் வாழ்வை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டோம். இவ்வாழ்வின் இறுதி இலக்கை நோக்கி எம்மனம் லயித்துப் போயிற்று.

எம் மனம் நடந்த மறுநாளே அவன் என்னைப் பலவிடங்களுக்கு அழைத்துச் சென்றான்.

நான் கொஞ்சம் பாரமானவள். இருந்தும் அவனுக்கு சுமையான சுகமாகிப்போய் 24 மணிநேரமும் இணைந்தே வாழத் தொடங்கினோம்.

ஓயாத அலை -01 முதல் தீச்சுவாலை வரை எத்தனையோ சமர்க்களங்களை இதுவரை நாங்கள் சந்தித்துள்ளோம். சண்டையென்று வந்துவிட்டால் எனக்கும் அவனுக்கும் ஏகப்பட்ட சந்தோசம் கொப்பளிக்கத் தொடங்கும்.

ஜெயசிக்குறுவின் போது புளியங்குளத்தில் என்னன்பன் விழுக்காயத்துக்குள்ளானான். சிறு காயந்தான். எதிரியின் எறிகணைச் சிதறலொன்று அவன் சிரசை சீவியிருந்தது. அவன் மருத்துவ முகாமில் சேர்க்கப்பட்டான். என்னையும் அங்கே அழைத்துச் செல்ல அவன் பெரிதும் பிரயத்தனம் செய்தான். அது நியதி இல்லையென நிராகரிக்கப்பட்டு விட்டது. நிம்மதி கெட்ட நான் மனசுக்குள் அழுது தீர்த்தேன். அவனோடு அவனாகி அவனைப்பராமரிக்கும் என் ஆசை நிராசையானது.

அவனும் அம்முகாமின் பொறுப்பாளரோடு எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான். பலனில்லை. இரு நாள் தான் கடந்திருக்கும் இரவோடு இரவாக என்னை வந்து சந்தித்தவன். என்னையும் அழைத்துக்கொண்டு களத்திற்குச் சென்றுவிட்டான். அவனைப் பிரிந்து நானும் என்னைப் பிரிந்து அவனும் உயிரோடிருப்பது உயிரின் ஓரங்குலத்தை குறைப்பதைப்போன்றது. அவ்வளவு இறுக்கமானதொரு காதல் எங்களுக்குள்.

ஓயாத அலைகள் - 03 நிறைவுற்ற வேளையில் மீண்டும் ஆனையிறவை மீட்கும் நோக்கோடு ஆமிக்காரன் அணியணியாய் தீச்சுவாலையை ஆரம்பித்தான். சுமார் எழுபது மணி நேரம் நீடித்த கடுமையானதொரு தன்மானச் சமரது. குடாரப்புவில் நாங்கள் தரையிறங்கிய போது சந்தித்த சவாலையொத்ததாய் இதுவும் சற்று வித்தியாசமாய்த்தானிருந்தது.

சண்டையின் கடுமையால் உரியநேரத்தில் சாப்பாடோ, குடிநீரோ வந்து சேரவில்லை. அப்படி வந்து சேர்ந்தாலும் அதனை அருந்தக் கூட அவகாசமில்லாத அசுர அவசரம் எமக்கிருந்தது. என் அன்பன் களைப்பால் மிகமிக சோர்வுற்றான். அதைப் பார்த்த எனக்கோ சொல்லொண்ணாத துயரம் தொண்டையை அடைத்து உயிரை உருக்கியது.

களைப்பால் கண்களை மூடி ஒருகணம் ஆசுவாசப்படுத்திய அவன் திகைத்துத்திரும்பினான். நானோ அவனோ சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. தொட்டுவிடும் தூரத்தில் இரு எதிரிகள். சுதாகரித்த என்னவன் என்னைச்சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டான். நான் அவ்விருவரையும் அடித்தே கொன்று விட்டேன்.

ஆனால்,

இதுவரை விழுக்காயத்தின் விலாசமறியாத நான் விழுப்புண்ணுக்குள்ளானேன். என் கழுத்துப்பகுதி சற்றே ஊனப்பட்டுப் போனது. சமரும் அத்தோடு ஒரு முடிவுக்கு வந்து எமக்கு வெற்றிச் செய்தி தந்துவிட்டுப் போனது.

எதிரியின் இரத்தம் தோய்ந்த என்னையும் தீராத துயரத்தையும் சுமந்தபடி அவன் காவலரண் திரும்பினான்.

எங்கள் கனிந்த காதல் இறுக்கமான பிணைப்பு. இவற்றை யுணர்ந்த அவனது உற்ற நண்பர்கள் ஒவ்வொருவராய் வந்து நலம் விசாரித்துப் போனார்கள்.

ஆனால் கடைசியாய் வந்த ஒருவரின் வார்த்தைகள் தான் கருநாகமாய் என் காதுகளைக் கொத்தின.

"இதுக்குப்போய் ஏனடாப்பா கலங்குறாய்...? இது போனால் இன்னொன்று. பேசாமல் அனுப்பிவிடு போய்ச் சேரட்டும்..."

என்னவன் ஸ்தம்பித்துப் போனான். என்னைக் கட்டிக்கொண்டு அழுதான். அவனுக்காய் என்னிடம் மானசீகமாய் மன்னிப்புக் கோரினான். ஒரு தாயின் பரிவோடு என்னையள்ளி தன் மடியில் கிடத்தியபடி தன் சுட்டுவிரலால் என் சோகம் துடைத்தான்.

அன்பானவளே,

எத்தனை பெரிய ஆபத்திலிருந்து என்னை நீ காப்பாற்றினாய். என்னை மட்டுமல்ல என் நாடு, என் போராளிகள் என் மக்கள் அனைவரையுமல்லவா நீ அடைகாத்தாய்! உனக்குள் தான் எத்தனை பெரிய வீரம், தியாகம், விடுதலையின் வெறி. உன்னை விலத்தியொரு உயிர் வாழ்வா. வேண்டாம். என் வீரச்சாவு கூட உன் வீர நிழலில் தான் விழ வேண்டும்.

வானமே தூர்ந்தாலும் பொருட்படுத்தாத அந்த வீரமறவன் வாய் திறந்தருளிய வார்த்தைகள் என்மேலிருந்த அந்த புரிதலோடு கூடிய புனிதமான காதலை கௌரவப் படுத்திய போது எனக்கும் கண்கள் கலங்கின. ஆனால் வழமைபோல எல்லாம் எனக்குள்ளேயே புதையுண்டு போயின.

அடுத்த நாள் துரிதமாக நான் சிகிச்சைக்கனுப்பப்பட்டேன். காவலரண்களைப் பலப்படுத்துவதற்காய் அவன் களத்திலே தரித்து விட்டான். அன்றைய அந்திசாயும் வேளையில் பூரண சுகமுடன் புதிய மெருகுடன் நான் அவன்வசமானேன் மாமியார் வீடு மீண்ட மனைவியைப் பார்ப்பது போல் அவன் பார்வையிருந்தது.

என்னவன் தன் நண்பர்கள் அனைவருக்கும் என்னைக்காவிச் சென்று காட்டி மகிழ்ந்தான். நான் பழைய நிலைக்குத் திரும்பியதையிட்டு அவனுக்கு பெரியதொரு உற்சாகமும் உத்வேகமும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

நானறிந்தவரை அவனடைந்த குதூகலத்தினை குத்துமதிப்பில் குறிப்பிட முடியாது.

அதன் பின்பு தான் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது. சண்டையைப்போல சமாதானத்திலும் இணைந்தே எங்கள் வாழ்விருந்தது. சண்டையைப்போல சமாதானத்தையும் நேசித்துக்கிடந்த அவ்வேளையில் தான் அவசர அவசரமாய் அவனுக்கொரு அழைப்பு வந்தது.

அவனை அரசியற்பணி உள்வாங்கிக்கொண்டது.

ஒரு வாரம் தற்காலிகப் பிரிவானது. ஒரு மாலை வேளையில் பிரிவால் துவண்டிருந்த என் முன் தோன்றி இன்ப அதிர்ச்சியளித்தான். என் கண்களையே நான் நம்ப மறுத்தேன். ஒரு வரிப்புலிக்குட்டியாய் இருந்த அவன் வெள்ளைச் சேர்ட்டும், கறுப்பு டவுசருமாய் கச்சிதமாய் காட்சி தந்தான். அவன் மிடுக்கினில் சொக்கிப்போன நான் மானசீகமாய் திருஸ்டிக்கழித்துக் கொண்டேன்.

சண்டையில் எவ்வளவு சாமர்த்தியவானோ அவ்வாறே அரசியல் அறிவிலும் அவன் ஆற்றலுள்ளவனாய் மிளிர்ந்தான். ஒரு தேச சுதந்திரத்துக்கான உரிமைப்போராட்டம் இரு பக்கங்களை நிச்சயமாய்கொண்டிருக்கும். யுத்த நகர்த்தலும் அரசியல் நகர்த்தலும் போராட்ட நாணயத்தின் இருப்பக்கங்கள் என்பதை புரிந்து கொள்ள வைத்தான்.

அவ்வேளையில் தான்.

மீன்பாடும் தேன்நாடு நோக்கி அவனது அரசியற்பணி ஆரம்பமானது. இன்று இரு மாதங்கள் கடந்த நிலையில் எதிர்பார்ப்போடு கூடிய கண்ணீரோடு காத்துக் கொண்டுள்ளேன்.

சுமார் ஒன்றரை வருசம் கடந்த நிலையிலும் இப்போதெல்லாம் சமாதானத்தை மக்கள் சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி இதுவரை எது சிறப்பாக ஈடேறியுள்ளது. எங்கள் குடும்பத்தினர் எவ்வளவோ விட்டுக்கொடுத்தும் முட்டுக்கட்டைகள் அகல முரண்டுதானே பிடிக்கின்றன.

ஏன்? எனக்குக் கூட சமாதானத்தின் பால் சந்தேகம் தான். அவ்வப்போது என் பிரிவுத்துயர் பொறுக்காது சமாதானத்தை நான் சபித்திருந்தாலும், என்னையே நான் நொந்திருந்த சந்தர்ப்பங்கள் அதிகம். ஆனால் சதா வந்தடையும் செய்திகளால் தான் ஒரு வரையறையற்ற குழப்பம்.

இதனை உணர்ந்ததன் பின்பே என்னவனுக்கு ஒரு சிறுமடல் வரைந்தனுப்பினேன்.

அது ஒன்றும் அநாகரிகமல்ல. நீங்களும் படிக்கலாம்.

என் அன்பானவனுக்கு உன்னவள் எழுதுவது!

மயிலே மயிலே இறகு போடென்றால் போடாது போலுள்ளது. முள்ளை முள்ளால் தான் எடுப்பதென்றால் அவர்களே அதைத் தீர்மானிக்கட்டும். வரவர சமாதானச் சங்கின் சத்தம் இரங்கலை இசைப்பதாய்த்தான் நான் உணர்கிறேன். அவர்களின் விதி இதுவானால் யார் மாற்றுவது? எப்போதும் போல் கடமையேஉனக்கு கண்ணாயிருக்கட்டும்.

உன் இனிய நினைவுகளோடு என் காலம் கழிகிறது.

அது சரி நீ எப்போது என் வசம்வருவாய் அன்பனே....

போகின்ற போக்கைப் புரியும் போது அந்நாள் நெருக்கமாய்த்தான் உள்ளது போலும்....

இப்படிக்கு!


காதலுடன் உன் கருவி. ●

உதவும் இதயம் உள்ளவனுக்குக் குறை கூற உரிமை உண்டு. - ஆபிரஹாம் லிங்கன்

# நூல் நோக்கு

## இன்னுமொரு நல்வருகை



நூலின் பெயர்: நிதர்சனத்தின் புத்திரர்கள் (நாடக எழுத்துருக்கள்)
எழுதியவர் :கந்தையா ஸ்ரீ கணேசன்
வெளியீடு :இணுவில் கலை இலக்கிய வட்டமும் வவுனியா கலை இலக்கிய நண்பர்களும்

பத்து நாடகங்களின் எழுத்துருக்களடங்கிய தொகுதியாக கந்தையா ஸ்ரீகணேசனின் 'நிதர்சனத்தின் புத்திரர்கள்' நூல் வெளிவந்திருக்கிறது. 1984 ஆம் ஆண்டு தொடக்கம் அவ்வப்போதாக இதுவரையில் ஸ்ரீ கணேசன் எழுதிய நாடக எழுத்துருக்களிவை.

இந்தப் பத்து நாடகங்களில் ஒன்றைத்தவிர ஏனையவை அரங்கேற்றப்பட்டவை, நிகழ்த்திக் காட்டப்பட்டவை. அரங்கிடப்படாத ஒரு நாடக எழுத்துரு, எழுத்துருப் பயிற்சிப் பட்டறையொன்றின் போது எழுதப்பட்டது.

தன்னுடைய கவனம் தான் இயங்கும் சூழலின் மீதும் காலத்தின் மீதுமேயிருந்தன வென்று இந்த எழுத்துருக்களினூடாக வெளிப்படுத்துகிறார் ஸ்ரீகணேசன். இதனால் ஏறக்குறைய கடந்த பதினைந்து வருடங்களாக ஈழத் தமிழர்களின் வாழ்க்கையும் மனப்போக்கும் நிகழ்காலமும் எப்படியிருந்தன என்பதற்கு நிதர்சனத்தின் புத்திரர்கள் ஒரு சாட்சியாகிறது. அதிலும் அடிமட்ட மனிதர்களின் பிரச்சினைகளும் உணர்வுகளும் அவர்களுடைய வாழ்க்கையுமே இங்கே கூடுதலாகப் பேசப்படுகிறது, பார்க்கப்படுகிறது.

இந்தப்பத்து நாடகங்களிலும் இயங்கும் பாத்திரங்களில் பெரும்பாலானவை அடிபட்ட மனிதர்களே. இவர்கள் எண்ணற்ற பிரச்சினைகளால் சூழப்பட்டவர்கள். ஒரு பிரச்சினையைத்தானும் வெற்றிகரமாகத் தீர்த்து விடமுடியாது தவிப்பவர்கள். எல்லாச் சூழல்களாலும் அலைக்கழிக்கப்படுபவர்கள்.

இந்தப் பிரச்சினைகளும் இந்த மனிதர்களின் வாழ்க்கையொளியும் உண்மையுடன் யதார்த்தத் தளத்தில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் தொழி ளாலர்கள், பயணிகள் , விறகு வெட்டிகள், விவசாயிகள், கீழ்மத்தி யதர வர்க்கக் குடும்பப் பெண்கள், சிறுதரகர்கள் எனப் பலர் இந்த முன்வைப்புக் களினூடே இயங்குகின்றனர். தங்கள் வாழ்வில் எத்தனை எத்தனை வலியும் ரணமும் சிதைவும் அலைவும் முரணும் உறவும் மறுப்பும் ஒத்தோடுதலும் இழுபாடும். நிகழ்கின்றன என்பதை நமக்குச் சொல்லுகின்றன இந்தப் பாத்திரங்களும் அவர்களின் மொழியும். இதனூடாக எங்கள் துயரையும் வலியையும் சிதைவையும் அலைவையும் முரணையும் உறவையும் மறுப்பையும் ஏற்பையும் இழுபாட்டையும் ஒத்தோடுதலையும் மீள்பார்வைக்குட்படுத்துகிறார் ஸ்ரீகணேசன்.

அரசியல் முரணும் போரின் விளைவுகளும் சமூகச் சிதைவுகளும் தான் நாடகங்களின் மையவிவாதத்தை நிகழ்த்துபவை. இந்த விவாதத்தை ஸ்ரீகணேசன் நேர்மையாக நிகழ்த்துகிறார். வெளிப்படையாக நிகழ்த்துகிறார். இந்த நேர்மை ஒரு உண்மை. பேருண்மை. உண்மையை அதன் ஒளியுடன் இயல்பான அழகுடன் பேசுகிறார். இங்கேதான் ஸ்ரீகணேசன் வெற்றியைப் பெறுகிறார்.

ஸ்ரீகணேசனுக்கு ஏறக்குறைய இருபது வருட நாடக அனுபவமிருக்கிறது. மௌனகுரு, குழந்தை ம. சண்முகலிங்கம், சோ. பத்மநாதன், வித்தியானந்தன், சிதம்பரநாதன் போன்றோருடன் நாடகச் செயற்பாடுகளிலும் அரங்க அனுபவப் பகிர்தலிலும் ஈடுபட்டிருக்கின்றார். இவற்றுடன் ஆங்கில நாடகப்பரிச்சயமும் உண்டு. ஸ்ரீகணேசன் அரங்களிக் கைகளுடன் ஏனைய கலை இலக்கிய வெளிப்பாடுகளிலும் ஈடுபாட்டிலும் உள்ளவர். இவை இந்த நாடக எழுத்துக்களின் செழுமைக்கு வலுவூட்டுகின்றன. மொழி, வடிவம், வெளிப்பாடு. பாத்திரங்களின் இயங்குநிலை உணர்ச்சி உறவு எல்லாவற்றிலும் இந்தச் செழுமை உண்டு. ஆனால், இந்த நாடகங்களில் பெரும்பாலானவை பாடசாலைகளில் நிகழ்த்தப்படுவதற்காக எழுதிச் செய்யப்பட்டவை. ஏனையவையும் கல்வி சார்ந்த களங்களில் நிகழ்த்தப்பட்டவைதான். ஆகவே நிகழ்காலத்துக்குரியவாறான மென்தணிவை இவை கொண்டிருப்பதையும் உணரமுடிகிறது. ஆனாலும் பொதுவாகவே வீரியங் கொண்டதொரு மீறலாக வழமைகளிலிருந்தும் விதிமுறைகளிலிருந்தும் ஸ்ரீகணேசன் தனது கவனத்தைக் கொண்டிருக்கிறார் என்பதையும் மறுக்கமுடியாது. ஸ்ரீகணேசனுக்கு வாய்த்திருந்த வாழ்க்கை அனுபவங்கள் கடந்த காலங்களில் அவ்வாறிருந்திருக்கிறது.

கடந்த பதினைந்தாண்டுகளில் சமகால வெளிப்பாட்டைக் கொண்ட நாடக எழுத்துருக்கள் புத்தகங்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. நிகழ்த்தப்படும் அரங்குடன் மட்டும் முடிந்துபோகாமல் இவை புத்தகமாக வரும்போது அது அரங்குக்கப்பாலான பல இடங்களுக்கும் விரிவு கொள்கின்றன. அத்துடன் நிகழ்த்தப்படும் காலத்துடன் தணிந்து போகாமல் மீளவும் படிக்கவும் நிகழ்த்தவும் கூடிய வாய்ப்பையும் அளிக்கின்றன.

இன்று ஈழத்தமிழ் புலம்பெயர்ந்திருக்கிற சூழலில் இவ்வாறான எழுத்துருக்கள் அவர்கள் வாழுமிடங்களில் இந் நாடகங்களை நிகழ்த்தக்கூடிய வசதியைக் கொடுக்கும். அத்தோடு இங்குள்ள நிலைமையையும் வாழ்க்கையையும் அவர்கள் சரியாக உணரக்கூடியதாகவும் இருக்கும். நமது சமகாலத்தை வெளியார் அறிந்து கொள்ள இது வொரு நல்லமுயற்சி.

அரங்குடன் நின்றுவிடாது தனது நாடக முயற்சிகளையும் எழுத்துக்களையும் புத்தகமாக்கியிருக்கும் ஸ்ரீகணேசனின் செயற்பாடு வரவேற்று, ஏற்று ஊக்கப்படுத்த வேண்டிய ஒரு நல்ல வெளிப்பாடு.

**கருணாகரன்**

# வெற்றிடம்



**பொன். காந்தன்**

சிறியதோர் வெற்றிடத்தை
உன்னால் நிரப்பமுடியவில்லை
ஆதலால்
இதோ பெரியதோர் வெற்றிடம்
உனக்கும் எனக்கும் இடையில்.
பெரிய வெற்றிடத்தில்
எவர் எவரோ
கரியால் பொருத்தமற்றதை எதிழுதியும்.
வெற்றிடம் அப்படியே இருக்க
உனக்கும் எனக்கும்
இயல்புக்கு அப்பால் நின்று
பாலம் இடுவது பற்றியும்.
வெற்றிடத்தில் தங்கள் கழிவுகளை
கொட்டுவது பற்றியும் சிந்திக்கின்றார்கள்.
அலைகளின் மோதலால்
பாறைகள் அரிப்புற்று அரிப்புற்று
அழகிய ஊரொன்று
அமிழ்ந்து போவது போல
உன்னையும் என்னையும் விழுங்கி விழுங்கி
வெற்றிடம் இன்னுமின்னும் பெருக்கின்றது.
மூலமான சிறிய வெற்றிடம்
"பேர்மூடாவின்" விசை கொண்டு
என்னை இழுக்கின்றது
உனக்கு எதிர்த்திசையில்
பலர் நிற்பது போல
உனக்கு நானும்
எனக்கு நீயும்
தொடுவானம் போல
ஆனால்......

# ஏனோ எனக்கு புரியவில்லை



ஊருக்குப்
போவதில
உங்களைப் போல
எனக்குள்ளும்
ஏதோ ஓர் ஆனந்தம்

கருவிலை நான்
இருந்த போது
கனதூரம் அம்மா
கொண்டுவந்ததால் – இப்ப
தெருவில் நடந்து போய்
பார்ப்பதில் – ஓர்
பேரானந்தம்

எனக்குத் தெரியாது தான்
ஆனாலும்
ஆச்சியும்
அப்புவும்
அம்மாவுக்குக் கொடுத்த
அழகான வீடாம்
அதை ஒரு முறை
பார்த்துவிடுவதில்
ஏதோ ஒரு
துடிப்பு

பாதையின் இருமருங்கும்
பார்வையை சுழட்டிப் பார்ப்பதில்
ஓர் திருப்தி
எங்களைப் போலவே
ஏராளம் குருவிகள்
தங்கடை கூடுகளை
பார்க்க வருகினம் போல

கன தூரப் பயணத்திற்குப்பின்
கையில் பிடித்து
கவனமாக வாடா என
அதட்டிய
அம்மா – முட்
கம்பி வேலிகளுக்கு அப்பால்
கைகளைக் காட்டி
கதறி அழுதாள்
கடவுளே என்ரை வீட்டை
எப்பதான் போவேன்

எனக்குள் ஏதோ ஓர்
உணர்வு
ஓடிச் சென்றேன்...
எங்கடை வீடு....
ஏன் முள்ளுக்கம்பி
அடிச்சிருக்கினம்?
ஆரோ நிறைய அந்நிய
ஆக்கள்....
அடிச்சுக்
கலைக்கவேணும்
ஆதங்கப்படும் மனதின்
எண்ண அலைகள்....
அவர்கள் எம்மை....
அனுமதிக்கவில்லை
எங்கடை வீட்டை போக.
எனக்கு மட்டும். ஏனென்று.....
இன்னும் ஏனோ புரியவில்லை
இவன் ஆர் எங்கடை காணிக்கு
நாங்கள் போறதை
தடுக்க.!

**றமேஸ்**

## குட்டிக்கதை

# குழந்தையின் கேள்வி



எனது கிராமம் நீண்ட காலமாய் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் இருந்தது.

இராணுவத்தினர் வெளியேறிய பிற்பாடு சில நாட்களின் பின் நானும் மனைவியும் எனது ஐந்து வயது மகளுமாய் வீடு வளவைப் பார்க்கப் போயிருந்தோம்.

என்னப்பா!குறுக்கும் மறுக்குமாய் சின்னச் சின்ன மண் அணைகள், முள்ளுக்கம்பிச் சுருள்கள், அகழிகள் எண்டு வீட்டை சுத்தி அமைச்சிருக்கிறாங்கள்.

நான் நினைக்கிறன் எங்கடை வளவுக்குள்ளை ஆரோ ஒரு அதிகாரி இருந்திருக்கிறான் போலை அதுதான் இவ்வளவு இறுக்கமாய் இருந்திருக்கிறான். எனது ஊகிப்பை மனைவியிடம் தெரிவித்தேன்.

வீட்டை பார்வையிட்டு திரும்பும் வழியில், மிகவும் இறுக்கமாய் உடையணிந்து முன்நெற்றி முடியை உயரமாய் அரைபிறைவடிவத்தில் வளைத்துச் சுருட்டி நடக்கவே சிரமப்பட்டபடி ஒரு யுவதி எங்களின் எதிரே வந்துகொண்டிருந்தாள். அவளை கூர்மையாய் கண்ணுற்ற எனது மகள் என்னை இப்படிக் கேட்டாள்.

"அதிலை வாற சித்தி நல்ல இறுக்கமாய் உடுப்புப் போட்டிருக்கிறா, தலையில முன்னுக்கு அணையும் கட்டியிருக்கிறா ஏனப்பா"?..?..?.

**ஆவரங்கால் சுதன்**






## சிறுவர் கதை

# புதுப்பாசம் பெருநாசம்


ஒரு வீட்டில் இரண்டு கோழிகள் இணை பிரியாது வாழ்ந்து வந்தன. இரண்டும் ஒன்றை ஒன்று விட்டுப் பிரிவதே இல்லை.

இவை வீட்டுக்காரருக்கு பயன்படும் வகையில் தினமும் முட்டைகள் இட்டன. ஆனால் உணவு வழங்குவதே இல்லை. கோழிகள் இரண்டும் சிறு பூச்சி புழுக்கள் மற்றும் நிலத்தில் சிதறுண்டுடிருக்கும் தானியங்களையும் உண்டு வந்தன.

ஒரு நாள் அவ்வீட்டின் சமையலறையில் இருந்து பலகார வாசனை வந்தது. அப்போது ஒரு கோழி மற்றைய கோழியிடம் "எம்மால் பயன் பெறும் இவர்கள் எம்மைச்சரியான முறையில் கவனிப்பதும் இல்லை எமக்கு நல்ல உணவுகளைத்தருவதும் கிடையாது. தமக்கு எப்படி எல்லாம் உணவு தயாரிக் கிறார்கள்! நன்றி கெட்டவர் கள்! என்று சொன்னது.

''ஆமாம்!'' என்று ஆமோதித்தது மற்றக்கோழி. இதே வேளை அந்த வீட்டுக்காரன் அழைக்கும் சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தது வீட்டுக்காரனைப்பற்றிக் குற்றம் சாட்டிய கோழி வீட்டுக்காரனின் கையில் நிறையத் தானியங்கள் இருந்தன.

கோழிகளை நோக்கி அந்தத் தானியங்களை வீசினான் வீட்டுக்காரன். "நண்பனே! வா அந்தத் தானியங்களை உண்போம்



நீதான் அவர்களைக் குறை கூறினாயே! அவர்கள் அப்படியல்ல" என்று கூறியது மற்றக்கோழி.

"வேண்டாம்! போகாதே இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. என்றைக்குமே இல்லாத புதுப்பாசம் இவர்களுக்கு இன்றைக்கு ஏன் வந்தது யோசித்துப்பார்!" என்று தடுத்தது.

''என்றுமே தமக்குக் கிடைக்காத தானியத்தைக் கண்டதும், ஆசை கொண்ட கோழியே நண்பனின் பேச்சைப் பொருட்படுத்தாது ஓடிச்சென்று தானியங்களைக்கொத்தித்தின்றது.


அவ்வளவுதான் தானியங்களைப் போட்ட அவன் அமத்திப் பிடித்தான் அந்தக் கோழியை.

"இன்றைக்கு எங்கள். வீட்டுக்கு வரும் விருந்தாளிக்கு இந்தக்கோழி போதும் என்று தன் அருகில் நின்ற தம்பியிடம் கூறி கோழியைக்கொண்டு சென்றான் வீட்டுக்காரன்.

வீட்டுக்காரன் தன் நண்பனை பிடித்துக்கொண்டு போவதைப் பார்த்துக்கொண்டு நின்ற மற்றகோழி " ஒருவர் என்றும் இல்லாதவாறு எம்மீது பாசம் காட்டினால் நாம் கவனமாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் கோழிக்கு ஏற்பட்ட கதிதான் எமக்கும் ஏற்படும்." என்றது.

**சு.சர்மிலா**

## வாரம் ஒரு குறள்



நாம் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் சந்தோஷமாகவும் அன்பாகவும் இருக்கப்பழக வேண்டும். வாழ்வின் பயனே இன்பமாக இருத்தல் தான். ஆகையினால் இன்ப மாக இருக்கவேண்டுமாயின் இனிய வார்த்தைகளைப் பேசப் பழகிக் கொள்ளவேண்டும். அதைவிட்டு பேசாதவார்த்தைகளைப் பேசுவ தால் துன்பத்தையே அனுபவிக்க வேண்டிவரும். இன்று உலகில் அனுபவிக்கப்படும் அதிக துன்பங்களுக்கு மூலகாரணம், இங்கிதமான, இனிய வார்த்தை களைப் பேசப்பழகாமையே. அதனால் தான் வள்ளுவர் தனக் குரிய மொழியில் -


**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"**

என்று அழகாகக் கூறியுள்ளார்.

## தமிழீழம் பற்றி அறிவோம்

01. வட தமிழீழத்தில் நெல்வளம் கூடிய நாடு எது?
கிளிநொச்சி.
02. தமிழீழத்தில் மிகச் சிறிய மாவட்டம் எது?
யாழ்ப்பாணம்.
03. தமிழீழத்தில் மிகப் பெரிய மாவட்டம் எது?
அம்பாறை.
04. தமிழீழத்தில் அதிக மக்கள் வாழும் மாவட்டம் எது?
யாழ்ப்பாணம்.
05. தமிழீழத்தில் குறைந்த மக்கள் வாழும் மாவட்டம் எது
முல்லைத்தீவு.

**தேவா.நிருபரன், ஆண்டு -05,**
**மு/சிறிசுப்பிரமணியவித்தியாலயம்.**




அருகில் காணப்படும் உருவத்தில் உள்ள புள்ளிகளை இலக்க ஒழுங்கின்படி இணைத்து ஒரு அருமையான வளர்ப்புப் பிராணியை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

## தேசிய அடையாளங்கள்

1.ஆஸ்திரேலியா - கங்காரு
2.கனடா - வெள்ளை லில்லிமலர்
3.பிரான்ஸ் - லில்லிமலர்
4.இந்தியா - அசோகசின்னம்
5.ஜப்பான் - கிரய்சேன்த்தம்பூ
6.பாகிஸ்தான் - பிறைச்சந்திரன்
7.ஸ்பெயின் - பருந்து
8.இங்கிலாந்து - ரோசாப்பூ
9அமெரிக்கா - தங்கக்கம்பி
10.ஐ.நா.சபை - ஆலிவ் மரக்கிளை

**நா.சௌர்த்தி, தரம் -7B**
**யா/சுண்டுக்குளி**
**மகளிர் கல்லூரி.**

## குறுக்கெழுத்துப் போட்டி 22




### இடமிருந்து வலம்

01. இராமரின் தந்தை.
07. வெட்டுவதற்கு பயன்படுவது
15. நிலத்தில் புற்று எடுப்பது குழம்பியுள்ளது
19. காற்றில் பறக்கவிடுவது குழம்பியுள்ளது
28. கோயில்களில்கட்டப்படிருப்பது குழம்பியுள்ளது.
32. அரசனை இதில் இருத்தி சுமந்து செல்வர்

### மேலிருந்து கீழ்

01.பிதா
02. ஓசை
12.வாசல்களில் இதனை வைத்து வரவேற்பர் குழம்பியுள்ளது
15.படுக்கப் பயன்படுவது

**குறுக்கெழுத்துப்போட்டி இல.20 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**
01. ஆதவன்.
07. கடுகு.
11. மதி.
15. மாவீரர்.
19. தம்பி.
23. காடு.
27. மன்னன்.
32. சமாதானம்.

**மேலிருந்து கீழ்**
01. ஆடு.
02. தகனம்.
06. கதிர்காமம்.
25. சரி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.20 இன் பரிசுக்குரியவர்**
**செல்லையா. கோபிகா,**
**கிளி/பளை மத்திய கல்லூரி, பளை**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.20 இன் பாராட்டுக்குரியவர்கள்.**

சா. மனோகரன்,
40A,ஹம்டன் ஒழுங்கை,
கொழும்பு -06.

வி. விஷ்ணுஜன்,
''ஸ்ரீரங்கம்'' கேணியடி,
கொக்குவில்.

வ. ஜனகரன்,
நெளுக்குளம்,
வவுனியா.

இ. மயூரன்,
கிளி/மத்திய கல்லூரி

இளையவர்களே! ☞
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.22
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# எனது பாடசாலை

**எனது பாடசாலை முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை எனும் அழகான கிராமத்தில் அமைந்துள்ளது. எனது பாடசாலையின் பெயர் மு/முள்ளியவளை தமிழ் மகாவித்தியாலயம் ஆகும். எனது பாடசாலை அதிபரின் பெயர் திரு.சு. வீரசிங்கம் அவர்கள். மூன்று கட்டடமும் அழகிய ஒரு நூலகமும் இங்கு உண்டு. இங்கு ஒரு அழகியசிறிய சிறுவர் பூங்காவும் உள்ளது. எனது பாடசாலை ஒரு சிறிய பாடசாலை ஆகும். இங்கு தரம் 1-9 வரையான வகுப்புக்கள் உண்டு. இங்கு 12 ஆசிரியர்கள் உள்ளனர். 300 ற்கு மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர்.**

**எமது பாடசாலையில் சில பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை உண்டு. இதை எமது அதிபர் கிராமத்தில் உள்ள படித்தவர்களை அழைத்து அக் குறையை நிவர்த்தி செய்கின்றார். எமது அதிபரின் அயராத உழைப்பினாலும், ஆசிரியர்களின் ஒத்துழைப்பினாலும் பல போட்டிகளில் எமது பாடசாலை முதலிடம் வகிக்கின்றது.**

வீ. வைதேகி
தரம் -7
மு/ முள்ளிவளை தமிழ் வித்தியாலயம்

## நகைச்சுவை



நாய்வியாபாரி:-
வாங்கதம்பி இந்த நாய் வீரமுடையது. எஜமானுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் காவல் காப்பது என்றால் இதற்கு மிகவும் பிடிக்கும். இரவில் கள்வன் வந்தால் துரத்திப்பிடிக்கக்கூடியது.
வாங்க வந்தவர்:-
அப்படியா?
நாய்வியாபாரி:-
ஆமாம் ஆனால் நீங்கள் ஒன்று மட்டும் செய்யோணும்
வாங்க வந்தவர்:-
என்ன செய்யணும்
நாய்வியாபாரி:- நாய் தூங்கும் போது தட்டி எழுப்பிவிடவேண்டும்

இ.ராஜ்குமார்,
மு/புதுக்குடியிருப்பு.ம.வி


☞ கவலையைப் போக்க விஸ்கியை விட, வேலை சிறந்த மருந்து. -எடிசன்

**பொருண்மியம்**

(சென்றவாரத்தொடர்ச்சி)

# கிளிநொச்சி மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மெருகூட்டும்

# புழுதியாற்று அபிவிருத்தித் திட்டம்



**சிவக்கொழுந்து புவனேஸ்வரன்**

முக்கிய திருப்புமுனையாக வவுனியா அரசாங்க அதிபரும் வடபகுதிக்கான அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருமாகிய திரு.கே.கணேஸ்அவர்கள் 2001.04.11 ஆம் திகதி நடைபெற்றமாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த போது இத் திட்டம் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. இது மக்களின் பொருளாதார அபிவிருத்திப் பயன் பாட்டுக்கு அதிக பயனளிப்பதால் உடன் வேலைகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த திரு. இ. ஐயாத்துரை அவர்களால் 2001.08.23 ஆம் திகதி மாவட்ட விவசாயக்குழுக்கூட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் வகுக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியினருக்கும் உரிய பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது இதன்படி இடத்தேர்வு, மட்டம்பார்த்தல் போன்ற நுட்ப வேலைகளை நீர்ப்பாசன எந்திரி அவர்களின் பணிப்பிற்கு அமைய கிளிநொச்சி மாவட்ட எந்திரி திரு.ந. கந்தசாமி அவர்கள் தனது உத்தியோகத்தர் ரி.ஏ. இராமேஸ்வரன், ரி.ஏ. பாலசுப்பிரமணியம் சகிதம் இப்பணியை நிறைவேற்ற உதவினார். தமிழர் புனர்வாழ்வு நிறுவன ஏற்பாட்டில் ஒக்ஸ்பாம் நிறுவனம் நிதி உதவிசெய்ய சம்மதித்ததன் பேரில் தமது திட்டப் பணிப்பாளர்கள் பொறியியலாளர்களுடன் வருகை தந்து வேலைத் திட்டத்தை விரைவுபடுத்த உதவினார்கள். நிதி உதவிகள் கட்டுமானப் பணிகள் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியைச்சேர்ந்த திரு சி. வடிவேலன் (ரவிராஜ்.) திரு.வி. சிவானந்தராசா, திரு.தி. நாகேஸ்வரன் ஆகியோர் முழுநேரமாகப் பணிகளைச் செய்து திட்ட அமைப்பு வேலைகளை நிறைவேற்ற பெரும் பங்காற்றினார்கள். மாவட்ட த.பொ.மே. நிறுவனப் பொறுப்பாளர். திரு. மதன்ராஜ், அவர்களும் நடுவப் பணியகப் பொறுப்பாளர், திரு.சி. கு. தூயவன் அவர்களும் தேவைக் கேற்றளவு உதவிகளையும் இயந்திரங்களையும் தந்து உதவினார்கள். குளத்தின் பாதுகாப்பிற்கும், பராமரிப்பிற்குமான பொறுப்பு அப்போதைய கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளர் திரு. சி. புவனேஸ்வரனிடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டுமானப்பணி தொடங்கிய காலத்திலிருந்து முடியும் வரை தனது ஆளணியைப் பயன்படுத்தி சிறந்த முறையில் பாதுகாப்புப் பராமரிப்புப் பணிகளைச் செய்துள்ளார். கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம் ஒக்ஸ்பாம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து மக்கள் பங்களிப்பு வேலைகளை தேவைக்கு ஏற்றபோது பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

இக்கட்டுமானப்பணிகள் 2001.08.30 ஆம் திகதி கரைச்சிப் பிரதேச செயலர் திரு. பொன் நித்தியானந்தம் அவர்களால் சமயச் சடங்குடன் ஆரம்பித்து வைக்கப் பட்டது. இதைத்தொடர்ந்து ஆரம்ப வேலைகளை சுமார் 80 அடி அகல அத்திவாரமும், ஏறக்குறைய 15 அடி உயரமும் 12 அடி அகலமும் உடைய அணைக்குமேல் ஓடுபாதையும் அதே போல் 700 அடி நீளமும் கொண்டதான வேலையும் 2001.12.15 ஆம் திகதியுடன் நிர்மானிக்கப்பட்டதன் மூலம் முதலாம் கட்டவேலைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து மூன்று பிரதான ஆறுகள் மறிக்கப்பட்டது. பெருவெள்ளம் ஏற்பட்டதால்(320 ஏக்கர் அடி) 8அடி நீர்மட்டும் தேக்கப்பட மீதி நீர் பிரதான ஆற்றினால் ஓடவிடப்பட்டது. இதன் மூலம் இக்குளத்தைச் சுற்றியுள்ள மாயவனூர், வட்டக்கச்சி, இராமநாதபுரம், புதுக்காடு போன்ற கிரமங்களில் உள்ள கிணறுகளில் நீர் நிலைகள் வற்றாதநிலை தோற்றுவிக்கப் பட்டது.

இக் குளத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 1200 அடி நீள அணை முற்றுமுழுதாக சிவப்புக் களி மண்ணினால் கட்டப்பட்டுள்ளது. அணையின் மேல் பாதையில் ஏறக்குறைய 22 அடி உயரமும் அதே போல் 10 அடி மேல்பாதையும் கொண்டதாக நிர்மானிக்கப்பட்டு குளத்தின் கிழக்குப்பக்கமாக ஏறக்குறைய 140 அடி வான்பகுதி நிர்மானிக்கப்பட்டது. வான்பகுதி நிர்மானிப்புக்கு மண் உதைப்பு இயந்திரமும், (புல்டோசர்) ஏனைய பகுதிசார் புனரமைப்புகளிற்கு உழவு இயந்திரமும், மனித உழைப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் கட்ட வேலைக்காலத்தில் பொருளாதாரத் தடையும் மக்கள் வேலை வாய்ப்பின்றியும் இருந்தனர். இதனைக் கருத்தில் கொண்டு மாயவனூரில் உள்ள நகுலன் குடியிருப்பில் இடம் பெயர்ந்திருந்த மக்கள் பங்களிப்பு மூலம் இக்குளம் நிர்மானிக்கப் பட்டதால் அம்மக்கள் அதிக பயனடைந்துள்ளார்கள்.

2000.12.17 அன்று திடீரென 16 அடியாக இருந்த நீர் மட்டம் 22 அடியாக உயர்ந்தது. உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டது. தக்க தருணத்தில் வான்பகுதிகள் சீரமைக்கப்பட்டதால் நீர் வடிந்து இவ் அனர்த்தம் தவிர்க்கப்பட்டது. மழைகாலங்களில் முழுப்பரப்பிலும் 16 அடி அளவான நீர் தேக்குவதால் சமுத்திரம் போல் காட்சி தருகின்றது. இவ் நீர்இரணைமடு,கல்மடுகுள அணைப்பு வீதியாகிய எல்லைப் பாலை வீதியை மூடியநிலையில் பரந்து காணப்படுகின்றது. இவ்வாற்றினால் வந்த நீரில் அரைப்பகுதி தேக்கப்பட மிகுதி கடலுடன் சங்கம மாகின்றது. முழு நீரும் தேக்குவது என்றால் ஆ[illegible]குறைந்தது 05 அடி உயர்த்தி மேற்குப்பத்திலுள்ள வான்பகுதிக்கு கதவுகள் புதிதாக போடவேண்டியிருப்பதோடு நீர்ப்பாசனத்திற்கு புதிதாக சுலுசும் அமைக்க வேண்டும். இது வரை நடைபெற்று முடிந்த வேலைகளுக்கு ரூபா முப்பத்து ஐந்து இலட்சத்திற்கு மேல் முடிந்தாலும் இதில் தமது திட்டப்படியான மதிப்பீட்டுத் தொகைக்குள் பதினெட்டு இலட்சம் ஒக்ஸ்பாம் நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது. மீதிப்பணம் த.பொ.மே நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. இப்பகுதி விவசாய அமைப்புக்கள் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான திரு.குமார் பொன்னம்பலம் கஜேந்திரகுமாரிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அவர் ரூபா நான்கு இலட்சம் பன் முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இருந்து ஒதுக்கியுள்ளார். இந்நிதி மூலம் அணைக்கட்டு உயர்த்தப் பட்டு வருகின்றது. கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்களும் இம் முயற்சிக்கு கைகொடுத்து நிதி ஒதுக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்.

இத் திட்டத்தையும் பார்வையிட்டு, முக்கியத்துவம் உணர்ந்த அரசாங்க அதிபரும், பிரதேசசெயலரும், த.பொ.மே. நிறுவனப் பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் போன்றோர் இத் திட்டத்தை பார்வையிட்டு 2003ஆம் ஆண்டு நியாப் திட்டத்தில் (வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயதிட்டம்) சேர்த்துக் கொண்டுள்ளதுடன் மாயவனூர் கிராமத்தையும் மையக் கிராமமாகச் சேர்த்துள்ளார்கள். மேலும் 2001,2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட பெரிய நீர்த்தேக்கமாக இருப்பதால் தாம் தொடர்ந்தும் இக்கிராமத்தை அபிவிருத்தி செய்ய ஒக்ஸ்பாம் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

03. பயன்பாடுகள்

இக்குளத்தின் கட்டுமான அபிவிருத்திப்பணிகள் நியாப் திட்டத்துடன் சேர்க்கப்பட்டதால் மயவனூர் கிராமவாசிகள் குறைந்தது 300 குடும்பங்கள் பயனடையக் கூடிய சாத்தியம் உள்ளது. அத்துடன் ஒக்ஸ்பாம் நிறுவனமும் இக்கிராமத்தில் அதிக அக்கறை கொண்டிருப்பதால் வறுமையில் வாழ்ந்த இப்பகுதி மக்கள் அனைவரும் உழைப்புடன் கூடிய விவசாயிகளாக மாறிவருகின்றனர். கிணறுகளில் நீர் வற்றாத நிலை ஏற்பட்டுள்ளதால் குடிநீருக்குத் தட்டுப்பாட்டுக்கு இனி இடம் இல்லை. இரணைமடுக் குளத்தின் வலது கரைப் பக்கமாக உள்ள சிறுவயல் நிலங்கள் அநேக தடவை நெற்பயிர்கள் வரட்சியால் பாதிப்படையும் காட்சியை இனிக் காணமுடியாது. இரணைமடுக்குளத்தின் பழுவைக்குறைக்க சிறுபோக காலத்தில் குறைந்தது 400 ஏக்கருக்கு இக்குளம் நீர்வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மட்டுமல்ல கிளிநொச்சி மாவட்டத்தின் புராதன கிராமமான கண்டாவளைப் பிரதேசம் பொருத்தமான நீர்ப்பாசன குளம் இல்லாததால் சிறுபோக வேளாண்மை செய்வதில் அவர்கள் படும்துன்பம் இத் திட்டத்தினால் தீர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்குளத்தின் மேலதிக நீர் பெரிய குளம் சென்று அதனூடாக கண்டாவளைப் பிரதேசம் செல்கின்றது. தற்போது விருத்தியடைந்து வரும் நன்னீர் மீன்வளர்ப்புக்கு உகந்த இடமாக காணப்படுவதால் பொருத்தமான மீன் இனங்கள் வளர்க்கத்திட்டமிடப் பட்டுள்ளது. அருகிலுள்ள நகுலன் குடியிருப்பில் மீன்பிடித்தொழில் செய்யக்கூடியவர்கள் இருப்பதால் அவர்களின் ஜீவனோபாயத்திற்கும். போசாக்கிற்கும் புதிய வழியை ஏற்படுத்தியுள்ளது. குளப் பிரதேசத்தில் கால்நடை அபிவிருத்திக்கு பொருத்தமான மேய்ச்சல் தரவை இடங்கள் குளத்தின் தென்மேற்கு, தென் கிழக்குப் பக்கத்தில் காணப் படுகின்றன.

இவ்வாறாக உருவாக்கப் பட்டு படிப்படியாக வளர்ச்சி அடைந்த புழுதியாற்றுக்குளம் காலவோட்டத்தில் சூழவுள்ள மக்களின் பொருளாதாரத்தில் மட்டுமல்ல கலாச் சாரம், கல்வி போன்ற விழுமியங்களிலும் தாக்கம் செலுத்தியதை மறுப்பதற்கில்லை இதற்கேற்றால் போல் கோவில்கள் சூழ்ந்த இப்பிரதேசத்தில் நீர்த்தேக்கம் அமைக்கப் பட்டது.தேசவளர்ச்சிக்கு வித்திட்டது என்ற கூற்று நிரூபனமாகியுள்ளது. வடதிசையில் ஸ்ரீரங்க நாதப் பொருமாள் கோவிலும் மேற்குத் திசையில் சிவனாலயமும் அதனருகில் அன்னை வேளாங்கன்னி கோவிலும் கிழக்கே வருடம் முழுவதும் நீரை வழங்கக் கூடிய புழுதியாற்றுக்கு அருகில் அருள்மிகு மாவடி அம்மனும் அமைவு பெற்று விளங்குகின்றது. கல்விச் செல்வம் வளர தனியாக பாடசாலையும் 2003ஆம் ஆண்டில் உருவாக்கப்படவுள்ளது. எனவே மேலும் இக்கிராமத்தின் வளர்ச்சியில் வியத்தகு மாற்றத்தைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை இக் கிராமமக்களிற்கு நிறையவே உள்ளது.

எனவே இத்திட்டம் சிறிதாக ஆரம்பித்து பாரிய தேக்கமாக மாற்ற மடைவதற்கு உதவிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், ஒக்ஸ்பாம் நிறுவனம், அரச அதிபர்கள், பிரதேச செயலாளர் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன எந்திரியும் அவர்கள் சார்ந்த உத்தியோகத்தர்கள், வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து வருகை தந்த நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர்கள். பொறியியலாளர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், தமிழர் புனர்வாழ்வு நிறுவனம், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனம், கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தினரும், இப்பகுதி கிராம சேவர்கள் விவசாய அமைப்புச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் இப் பிரதேசங்களின் மக்கள் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் அதுமட்டுமல்ல குளஅபிவிருத்தி மேலும் விஸ்த்தரிக்க சகல தரப்பினர்களும் தொடர்ந்தும் முன்னைய காலம் போல் உதவுவார்கள் என்ற நம்பிக்கை நிறையவே அனைத்து மக்களிடமும் இருக்கிறது. ■

---

## ஊக்கமாத்திரை



## சார்புநிலை மனமுதிர்ச்சிக்கு முட்டுக்கட்டை

*தனியாக* இருப்பது பொதுவாக வெறுமை, சோகம் விரக்தி, போன்ற நிலைகளுடன் சேர்த்து பேசப் படுகிறது. "எல்லாவற்றையும் விட்டு விட்டு தனியாய் போகிறேன்" நொந்து போய்தனியாய் அழுதேன் என்று எல்லாம் எமக்கு அறிமுகமானவர்கள் எம்மிடமே பேசியிருப்பார்கள். தனியாக இருப்பது துயரம் தரக்கூடியதா? தனிமை தனியாய் இருப்பதைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்.

நாம் நிறையப் புத்தகங்களில், கதைகளில், பாடல்களில் என்று எல்லாம் எங்களுடைய சோகத்தையும், தனிமையையும் இணைத்துள்ளோம். உண்மையில் தனிமை என்பது மிக, மிகச் சிறந்த துலங்கலாகும். தனிமையில் இருப்பவர்களே இயற்கையை இரசிக்கிறார்கள். அந்த இரசிப்பு கற்பனைவளம் அவர் அறிவுத்தேடலை மென்மேலும் மேன்படுத்துகின்றது.

தனித்திருத்தல் தனிமை பற்றி மனநல மருத்துவர் மிக அற்புதமானநூல் ஒன்றை எழுதியுள்ளார். அதில் உலகில் சிறந்த படைப்புக்கள் தனிமையில் தான் உருவாயின என்று விளக்குகின்றார். கண்ணதாசன் கூட பாமர ஜாதியில் தனி மனிதன் நான்! படைப்பதனால், என்பேர் இறைவன் என்று படைப்பதையும், தனித்திருப்பதையும் இணைத்தே பாடியிருக்கிறார். எம்மில் பலர் தனியாகஇருப்பதை பாரமாக, சுமையாக, கொடுமையாக கருதுகின்றார்கள்.

தனிமை என்பது மனிதனை கொடுமைப் படுத்துவதை விட அவன் உள்ளிருக்கும் 'ஆற்றலை வெளிக் கொண்டுவரும் சக்தி வாய்ந்தது என்று தெரிகிறது. சிறையில் தனியே இருக்கும்போது நேருவின் அபரிதமான மொழி ஆளுகையின் முழுப் பரிமாணமும் வெளிவந்தது. உலக இலக்கிய வரிசையில் இடம்பிடிக்கும் நூல்களாக உருவானது. சிறையில்தான் கிட்லர் கூட "மெய்ன் காம்ப்" என்ற நூலை எழுதினார். தனிமைச்சிறையில்தான் டாஸ்டாங்ஸ்கி என்ற மாபெரும் கலைஞன் அற்புதமான நாவல்களை உருவாக்கினார்.

தனிமை என்பது சிறைச்சாலை அடைப்பில்தான் என்பது அல்ல. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் வரலாம். பாடல்களை இயற்றிய கண்ணதாசன்கூட சில தத்துவப்படைப்புக்களை நகர நெரிசலை விட்டு தனியாக இருக்கும்போதே இயற்றியதாக அறிந்தோம்.

அப்படி என்றால் படைப்புத்திறன் வளர தனியாகவே இருக்க வேண்டுமா? தனிமை படைப்புத்திறனை ஊக்குவித்து சிந்தனையை, அறிவை, மெருகேற்ற உதவுகின்றது. இதனால் படைக்க வேண்டும் என்பதற்காக தனிமையை வேண்டுமென்றே வாழ்வில் உருவாக்கிக் கொள்ள வேண்டியது இல்லை.

உன்னை அறிந்தால் உலகத்தில் நீ வாழலாம். எந்த மனிதனும் தனிமையில் தனியே வாழ, வளரமுடியும். இது இருந்தால்தான், அவர் இருந்தால் தான் என்று நினைப்பதால் அந்த விசயத்தின் மீது அந்த நபர் மீது சார்புநிலை ஏற்படுகின்றது. சார்புநிலை மனமுதிர்ச்சிக்கு முட்டுக்கட்டை. தனிமை சிறப்பு வாய்ந்தது. சக்தி வாய்ந்தது என்பதற்காக ஊக்குவிக்கும் உற்சாகமூட்டும் உறவுகளை உதறிவிடவேண்டும் என்பதில்லை. எந்த நெருக்கமான பிணைப்பு முறிந்தாலும் மனிதன் தனியே வாழ, வளர மீண்டும் மகிழமுடியும் என்பதை உணர்த்துவதே தனிமைச் சக்தி. ●

**பானுமதி**

---

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.

-திருவள்ளுவர்.

# ஆக்கிரமிப்பாளர்களால் தீமை வாழ்கிறது

யாழ்ப்பாணச் செய்தித்தாள்களைப்பார்க்கும் போது குடாநாட்டில் தினசரி ஏதேனுமொரு பாரதூர மான குற்றச்செயல் நடைபெற்றுக்கொண்டிருப் பதை அவதானிக்கமுடிகிறது.

கொலை,கொள்ளை,பாலியல் வன்முறை, துர் நடத்தை என ஏதோவொன்று நாளாந்தம் செய்தித் தாள்களில் இடம்பிடித்துவிடுகின்றது.

1980களின் ஆரம்பத்தில் குடா நாட்டில் சாதிச் சண்டை, ஊர்ச்சண்டை, காணிச்சண்டை என சில வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. 1983 யூலை இனக்கலவரத்தின் பின்னர் மேற்படி சண் டைகள் தணிவடைந்தன. 1990களில் விடுதலைப் புலிகளின் நேரடிக்கட்டுப் பாட்டில் வன்முறைச்சம்ப வங்கள் இல்லை எனச் சொல்லுமளவிற்கு குறை வாகவே நடந்தன.

1995 இல் விடுதலைப்புலிகள் யாழ்குடா நாட்டை விட்டு பின்வாங்கியதும் சிறிலங்கா ஆயுதப் படையினரின் ஆளுகைக்குள் பல குற்றச்செயல்கள் நடைபெறத்தொடங்கின. பாரதூரமான குற்றச் செயல்கள் யாவும் படையினரோடு தொடர்புபட்டவை யாகவே இருந்தன. குடாநாட்டில் சீரழிவு கலாச்சார மொன்று தோற்றம் பெற படையினரின் செயற்பாடுகளே முக்கிய காரணிகள் எனலாம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் புலிகளின் வருகையால் குற்றச்செயல்கள் முன்னரிலும் பார்க்க குறைந்திருப்பதாக யாழ்ப்பாண மக்கள் கூறுகின்றனர். எனினும் அவை முற்றாகத் தணியவில்லை என்பதை அண்மைக்காலங்களில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் மர்மக்கொலைகள் கொள்ளையடிப்பதற் காக மேற்கொள்ளப்படும் கொலைகள், பாலியல் வன்முறைகள் என்பன கோடிட்டுக்காட்டுகின்றன.

சிறிலங்காவின் ஆயுதப்படையின் கட்டுப் பாட்டின் கீழ் உள்ள வடக்கின் முக்கியமான நகரங்கள் என யாழ்ப்பாணத்தையும் வவுனியாவையுமே குறிப் பிடலாம். வவுனியாவுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பா ணத்திலேயே அதிகமான குற்றச்செயல்கள் இடம் பெற்றுவருகின்றன என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது.

1995 இற்குப்பின்னர் ஆட்கொல்லி நோயான எயிட்ஸ் யாழ்ப்பாணத்திலேயே தொற்றத்தொடங்கியது. இருபது வயதிற்குட் பட்ட சுமார் பத்து பேர் வரையி லான இளம் பெண்கள் எச்.ஐ.வி கிருமி தொற்றியதான சந்தே கத்தின் பேரில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளதாக வைத்தியசாலைத்தகவல் ஒன்று கூறுகின்றது.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண்கள் திருமணமாகாமல் குழந்தைகள் பெற்றுள்ளதாக தொண்டர் நிறுவனமொன்று தெரி விக்கின்றது.

ரவுடிக் கும்பல்களின் அட்டகாசம் தற்போது குறைந்துள்ளபோதும் முற்றாக நின்றுவிடவில்லை.

பல பாடசாலை மாணவர்கள் குடிப்பழக் கத்திற்கு அடிமை யாகியுள்ளதாகவும் அறியமுடிகிறது.

சமாதானகாலத்தின் வரவாக போதைப் பொரு ட்களும் யாழ்ப்பாணம் வந்து சேருகின்றன. கஞ்சா பாவி த்த இளைஞர்கள் சிலர் யாழ் வீதிகளில் அட்டகாசம் புரிந்ததாக சில தினங்களின் முன் செய்தியொன்று வெளியானது.

90 லிருந்து 95 வரையான காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இரவு வேளைகளில் கூட பெண்கள் தனியாக வெளியேநடமாடமுடிந்தது. இப்போது அவ்வாறு முடிவதில்லை.

அக்காலத்தில் தமிழகத்திலிருந்து பாடகர் தேனிசைச் செல்லப்பா குழுவினரோடு வருகை தந்த சுவர்ணலதா என்ற பாடகிக்கு ஆச்சரியம் தந்தவிடயமே இது தான்.

யாழ்ப்பாணத்தெருக்களில் நள்ளிரவுகளில் கூட பெண்கள் நடமாடமுடிகிறது. தமிழ்நாட்டில் பட்டப்பகலில் கூட பெண்கள் நடமாடுகிறது ஆபத்தான தாகவுள்ளது. பெண்களது உண்மையான சுதந்திரத்தை இந்த மண்ணில் தான் காணமுடிகிறது என நேர்காணலொன்றின் போது என்னிடம் அவர் கூறினார்.

1995 இற்கு பின்வந்த ஏழாண்டு காலம் யாழ்ப்பாணச் சமூகத்திற்குள் நச்சு விதைகளைப் பயிரிட்டது எவ்வாறு? இத னைக்கட்டுப்படுத்த படித்த சமூக அக்கறை யுள்ளவர்கள் ஏன் முற்படவில்லை? அக்கால தீய கலாச்சாரத்தின் தொடர்ச்சி இன்னும் நீட்சி கொள்வதற்கு என்ன காரணம்?

வன்முறையுணர்வும் கோபமும் போர் காலத்தைவிட சமாதானக் காலத்திலேயே சமூகத்தில் அதிகரிக்கிறது என சமீபத்தில் நடந்த கருத்தரங்கொன்றில் உளவள ஆய் வாளர் ஒருவர் கூறியுள்ளார். அதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படவேண்டும்.

இயல்பு வாழ்க்கை சீர்குலைந்தமை தான் எல்லா தீமைகளுக்கும் காரணம் என யாழ்நகரின் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர்

**வேனிலன்**

என்னிடம் கூறினார்.

''உதாரணத்திற்கு நான் வாழும் சூழலைக் கூறுகின்றேன். முன்பு இந்த இடத்தில் வாழ்ந்த அயலவர்களெல்லாம் எனக்குத் தெரிந்தவர்கள். இந்த வீதியில் செல்லும் எந்தவொரு வரும் எனக்கு அறிமுகமில்லாதவராக இருக்க மாட்டார். 95 ம் ஆண்டு இடம்பெயர்வினால் பலர் இங்கி ருந்து வெளியேறிவிட்டனர். அதன் பின்பு இங்குள்ள பல முகங்கள் எனக்கு அறிமுகமில்லாதவை. ஆமிக் காரரின் ஆட்சியும் அறிமுகமற்ற அயலவரும் உள்ள சூழலில் தவறுகளைத் தட்டிக்கேட்க பயம். தானுண்டு தன்வேலையுண்டு என்றே வாழவேண்டிய நிலை. தட்டிக்கேட்க ஆளில்லாததால் தீமை செழித்து வளர்ந்தது. அதன் தாக்கம் இன்னுமிருந்து கொண்டு தானிருக்கிறது" இவ்வாறு அவர் சொன்னார்.

எழுத்தாளர் ஒருவர் கூறுகையில்:-

"1995 இல் பன்னிரண்டு வயதாகவிருந்த சிறுவனொருவன் 2002 இல் 19 வயது இளைஞனா கிறான். இங்கு நடைபெறும் போராட்டம் பற்றி அவனுக்குத்தெரியாது. அவன் இளைஞனாக வளர்ந்த சூழல் மோசமானதாக இருக்கிறது. 16 வயது சிறுவ னொருவன் 15 வயது சிறுமி யொருத்தியை கடத்திச் செல்ல முற்பட்ட சம்பவமொன்று எனது வீட்டினருகே நடந்தது என்றால் பாருங்களேன். சமூக கட்டமைப்பும் வாழ்வும் திடீரென சீர்குலைகிறபோது தவறுகள் அங்கு வந்து குடிகொள்கிறது" என்றார்.

வர்த்தகர் ஒருவர் தனது கருத்தைக் கூறுகையில் பலவற்றைப்புறக்கணித்தார்.

"யாழ்ப்பாணம் ஒன்றும் நீங்கள் நினைக்கும் வகையில் தலைகீழாக மாறிவிடவில்லை. எப்போதும் போலவே உள்ளது ஆங்காங்கே இடம் பெறும் சம்பவங் களை வைத்துக்கொண்டு சமூகமே சீர்குலைந்து விட்டதாக கூறப்படுவதுதவறு. மக்கள் செறிந்து வாழும் ஊர்களில் நல்லவர்களோடு குற்றவாளிகளும் கலந் திருப்பதென்பது உலகிலுள்ள பொதுவான விடயம் தான்" என்றார்.

தொண்டர் நிறுவன மொன் றின் அதிகாரி ஒருவர் இப்படிக் கூறினார். "வவுனியாவில் பொது வாக முகாம்களிலேயே படையினர்



நிலை கொண்டுள்ளனர். மக்களின் குடிமனைகளில் அவர்கள் நிலை கொண்டிருக்கவில்லை. அதேசமயம் வவுனியா படையினரால் திடீரென ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமல்ல. யாழ் குடாநாட்டின் நிலைமை வேறு. மக்கள் குடியிருப்புக்களில் மக்களோடு கலந்து படையி னரும் இருக்கின்றனர். ஒரு வளவில் பொதுமக்கள் குடி யிருக்க அடுத்த வளவில் ஆமி இருக்கிறான். அநேக மான இடங்களில் இதைக்காணமுடிகிறது.

ஏதும் தேவையெனில் அடுத்த வீட்டிற்கும் ஆமி போவான் இது ஒரு குழப்பமான வாழ்க்கைச் சூழல். சிலசமயம் இது சீர் கேடுகளுக்கும் வழிசெய்கிறது. இந்த வாழ்வு உண்மையில் இந்த மக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டதல்ல. பலவந்தமாக அவர்கள் மீது திணி க்கப்பட்ட வாழ்வுமுறை.

கணவன் வெளிநாடொன்றில் தொழில்புரிய வயது வந்த பிள்ளைகளோடு வாழும் பெண் ணொருத்தி படையினரிடமிருந்து தன் பிள்ளைகளைப் பாதுகாக்க படையதிகாரி யொருவரோடு நட்பைப் பேணவேண்டிய நிலைமைகளும் சில இடங்களில் ஏற்பட்டதுண்டு. திடீ ரென ஒரு இராணுவ ஆக்கிரமிப்பு நடைபெறுகிறபோது சமூக வாழ்வு முறையும்திடீரென சீர்குலைகிறது.."

ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்வரை, ஆக்கிர மிப்பாளர்கள் அசையும் வரை தீமைகளை நீக்குதல் சாத்தியமில்லையென்பது புலனாகிறது அல்லவா?


13ம் ஆண்டு
நினைவலைகள்
05ம் ஆண்டு



எங்களது இரு கண்கள்
என்றும்
ஒளி குன்றா நினைவுகளை
எங்களுக்குள்
பொழிந்து கொண்டேயிருக்கின்றன.



1990.12.12 ← வீரச்சாவு → 1998.05.29

லெப்.கரிகரன்
(கார்த்திகேசு புலேந்திரன்)

லெப்.கேணல் ஜெரி
(கார்த்திகேசு விஜயபாலன்)

நி.மு. சாவகச்சேரி

[சி-7885]

த.மு. கிளிநொச்சி



# வரலாறு தந்த துயரம்

## ஈராக்கிய குடிமகனின் வாக்குமூலம்

பிரவீன்

உங்கள் தலைவர் சதாம் ஹுசைன் அமெரிக்காவை உறுதியுடன் எதிர்த்துப்போரிட்டு நாட்டையும் உங்களையும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்க வில்லையா?

"நம்பிக்கை இருந்தென்ன. யுத்தம் எனது குடும்பத்தின் உயிரை மட்டும் தவிர்த்து நடக்குமா?

(சிரித்து விட்டுக்கூறினார்.) அதற்காக சதாமால் யுத்தத்தை வென்று விட முடியுமென்று நான் நினைக்கவில்லை."

"அப்படியென்றால் யுத்தத்தின் ஆரம்பம் வரை சதாம் ஹுசைன் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் யுத்தம் மீது நம்பிக்கையூட்டி ஆற்றிய உரை பற்றி என்ன நினைத்தீர்கள்?" என்று கேட்டேன்.

தந்த மறுப்புத்தான் ஆச்சரியமானது.

"யுத்தத்தை வெல்வது சதாம் ஹுசைனின் வீர வசனங்களோ, சதாம் ஹுசைனோ அல்ல. ஈராக்கிய இராணுவமல்லவா யுத்தத்தை வெல்ல வேண்டும். அது எங்கே சண்டை பிடிக்கத் தயாராய் இருந்தது. ஒரு காலத்தில் சண்டையிட்டார்கள் தான். இன்று அப்படியல்ல. வறுமையினால் தான் அதிகமானோர் அந்த இராணுவத்தில் இருக்கிறார்கள். சதாம் ஹுசைன் மீது அவர்களுக்கு எந்த விசுவாசமும் இல்லை. அதிலும் அதிகமானோர் 'சியாக்' முஸ்லிம்கள் தான். அதன் அதிகாரிகளாக மட்டும் சதாம் ஹுசைனின் 'சுன்னி' இனத்தவர்கள் இருந்தார்கள். அந்தப் படை எப்படி சண்டைபிடிக்கும். சதாமுக்கு என்றொரு படை இருக்கிறது தான். (பரா) அவர்கள் கறுப்புச் சீருடையணிந்திருப்பார்கள். ஐயாயிரம்பேர் வரைதான் அதில் இருப்பார்கள். அது சதாமுக்கு முற்றிலும் விசுவாசமான படை. அது சதாமினுடைய படை. அதில் 'சுன்னி' இன முஸ்லிம்கள் மட்டுமே இருக்கிறார்கள். அத்தோடு அது சதாமின் உறவினர்களும், நண்பர்களும், அவர்களின் நண்பர்களும் மட்டுமே அதில் சேர்க்கப்படுவார்கள். இந்தப் படை காணுமா? அமெரிக்கர்களுடன் சண்டையிட"



அவரது பதிலும், பதிலைத் தரும் அவரது முகபாவமும் எனக்கு முற்றிலுமே ஆச்சரியமாக இருந்தது. இதுவரை காலமும் ஊடகங்கள் உருவாக்கிய கருத்துலகமும் இவர் தருகின்ற வாக்குமூலமும் - ஆம் ஒரு இதழியலாளன் என்ற முறையில் அப்படித் தான் சொல்ல வேண்டும். - முற்றிலுமே எதிர் மறைப்பட்டதாக இருந்தது. இவரது வாயைக் கிளறினால் இன்னும் எத்தனை எத்தனை ஆச்சரியங்கள் இருக்கின்றனவோ. எனக்கு ஆவலாகவும் இருந்தது. அச்சமாகவும் இருந்தது. நீங்கள் எந்த இனம் என்று கேட்கும் ஆர்வம் உந்தவே நீங்கள் எந்த இடம் என்று சற்று மாற்றி என் வாய் கேட்டது.



"நாங்கள் "பஸ்ரா சிற்றி" ஈராக்கில் அது ஒரு பெரிய சிற்றி" என்று கூறியவரிடம் "பஸ்ரா சிற்றி" சியாக் முஸ்லிம்களல்லவா? என்று கேட்டேன்.

"ஓமோம்" என்று கையிலிருந்த பானத்தை அருந்தியவாறே சொன்னார். நான் தயக்கத்துடன் நீங்கள் 'சியாக்' முஸ்லிம்கள் தானே? என்று சாதாரணமாகக் கேட்பது போல் கேட்டேன்.

"ஓம் ஆனால் நாங்கள் கிறிஸ்தவர்கள்" என்று பதில் வந்தது. "கிறிஸ்தவர்கள் இருக்கிறார்களா?" என்ற எனது கேள்விக்கு

"ஓம் நிறையப் பேர் இருக்கிறார்கள்" என்றார்.

அடுத்த கேள்வியை மிகவும் பகிடியாகக் கேட்பது போல் பாவனை பண்ணியவாறு நான் கேட்டேன்.

"உங்களுக்கு சதாமைப் பிடிக்குமா?"

"அவன் ஒரு ஊத்தை வாளி" கிளாஸ்சில் இருந்து எழுந்த வாய் சொல்லியது. (அவர் பாவித்த மொழி He is a dirty fellow) .நான் அதை பகிடியாகவே ரசித்தவாறுகாட்டி சதாமை மாதிரியே மீசை வைத்திருக்கிறீர்களே என்றேன்?

(அடுத்தவாரம் வரும்)

---



# பேரினவாதக் கருத்தூட்டிகளும் போர்வெறி தணியா... படையினரும்

இன்று யாழ்ப்பாண மண்ணில், வேர்கள் விட்டிருக்கும் பெரும்பாலான இராணுவத்தினர் போர்வெறி கொண்டவர் களாகவே காணப்படுகின்றார்கள். இந்தச் சமாதான காலங்களிலும் அவர்களின் மனநிலைகள் மாறவில்லையென யாழ்ப்பாணத் தில் வாழும் பெரும்பாலானவர்கள் கவலையடைகின்றார்கள்.

பெரும்பாலான இராணுவத்தினர் மக்களுடன் சிரித்துக்கதைத்தாலும் அவர்க ளுடைய மனோநிலைகள் யாவும் போர்ச் சூழலில் காணப்பட்ட "இவர்கள் புலிகள" என சுட்டும் அதேபார்வைகளையே முகங்களில் வைத்திருக்கின்றனர். இவர்களின் இச் செயல்களானது இந்தச்சமாதான காலத் திலும் அச்சப்பட்டவர்களாகவே அவர்களின் வாழ் நிலையாக்கப்பட்டுவருகிறது.

இன்று பெரும்பாலான இராணுவத் தினர் சீருடைகளைக்கழற்றிவிட்டு நகரங்கள், பட்டினங்கள், கிராமங்கள் எல்லாம் சிவிலி யன்களாகவே நடமாடுகின்றனர். 1995 இற்கு முற்பட்ட காலங்களில் நகரங்கள், பட்டினங்கள், கிராமங்கள் எதுவானாலும் வித்தியாச மானவர்களைக்கண்டால்

"நீங்கள் யார்?" "எங்கே இருக்கின் றீர்கள்?"

"யாரிடம் வந்தனீங்கள்?" எனத் துருவித்துருவிக்கேள்விகளைக் கேட்கும் ஒரு மனநிலை இருந்தது.

அந்த மனநிலை ஏன் உருவான தென்றால், இது எங்கள் பிரதேசம், தமிழர் களின் தாயகம். இது தமிழர்களின் உரிமைக் காக நடத்தப்படும் போராட்டம். இந்தப் போராட்டத்தின் பால் விடிவைப்பிரசவிக்க வேணும் என்பதற்காக ஊடுருவல் தடுப்பு முயற்சியாகவே அப்படி நடந்தார்கள். ஆனால் இன்றைய நிலை அப்படியல்ல.

A-9 நெடுங்சாலை திறப்பானது பலமுகங்களை யாழ்ப்பாணத்துக்குள் வரவழைத்துவிட்டது. போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு கொழும்பிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்தவர்களின் வருகைகளும் இடப்பெயர்வுகளால் திக்கெட்டுப் போன உறவுகளின் மீள் வருகைகளும் அடைக்கப் பட்ட இராணுவத்தின் உறவினர் வருகையும் இவர்களுடன் ஊடக வியலாளர்களின் வருகை களுமே கவனிப்பற்ற ஒரு நிலைக்கு மக்களைத் தள்ளுப்படவைத்துவிட்டது.

இந்தச் சமாதானம் பல்லின மக்களும் ஒன்றாக இயல்பாக ஒரே சமநிலையில் வாழக்கூடிய ஒரு வாழ்வுப்பிரசவத்துக்கானது.

விடுதலைப்புலிகள் இந்த சமாதா னத்தை முற்றுமுழுதாக நம்பி அர்ப்பணிப் புக்களோடு நடந்து கொள்வதனால்தான் மக்கள் மத்தியில் அப்படியொரு விழிப்பு நிலை அற்றுப்போனது.

மக்களின் இந்த மனோ நிலையை நன்கறிந்த இராணுவத்தினர் இந்தச் சமாதானத்தில் நம்பிக்கையற்ற இராணுவத்தி னர் சிலர் தாங்கள் ஒரு பத்திரிகையாளர் களாகவும், வெளிநாட்டு உல்லாசப் பயணிக ளாகவும், வெளிநாடுகளிலிருந்து வரும் உறவி னர்களாகவும், மதகுருமார்களாகவும் வேஷங்கள் தரிக்கின்றனர்.

இவர்களின் நோக்கம் மீள் குடியேறு கின்ற மக்களைக் கண்காணிப்பதும் அவர்களில் எத்தனைபேரை விடுதலைப்புலிகள் என அடையாளப்படுத்துவதுமேயாகும். ஏனென்றால் இந்த A - 9 நெடுஞ்சாலை திறந்து விடப் பட்டதும் அவ்வழியால் வன்னியிலிருந்து வந்து குடியேறினவர்களை விடுதலைப்புலிகளா கவும் ஆதரவாளர்களாகவுமே இராணுவம் கருது கிறது.

இவர்களின் இந் நடவடிக்கைகளின் விளைச்சல், காலப்போக்கில் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோரின் பட்டியலை அதிகரிக்கச் செய்யும் (?)

இன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், இராணுவத்தோடு நின்றவர் களும், இராணுவ உளவாளிகளும், ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி, ராசிக்குழு உறுப்பினர்கள் என தேசவிரோத செயற்பாட்டாளர்கள் அண் மைக்காலங்களாக வெட்டிக்கொன்றும், சுட்டும் காணாமல் போவதுமாயுமிருக்கின்றார்கள்.

இந்த யுத்த நிறுத்த மீறல் செயல் களை விடுதலைப்புலிகளே செய்வதாக இராணு வம் கருதுகிறது. இச்செயல்களை பேரின வாதக்கட்சிகளான ஜே.வி.பியும், பொ..ஐ. முன்னணி அரசாங்கமும் பிரச்சாரக்கருப் பொரு ளாக்குகின்றன.

இந்தப்பிரச்சாரக்காலத்திலேயே- மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் உறுப்பினர்களை அந்த அமைப்பிலிருந்து எதிர் வினை கொண்டவர்களாலேயே சுட்டுக்கொல் லப்பட்டதெனும் சந்தேகம் புளொட் அமைப்பிடம் எழுகிறதென தென்பகுதிப்பத்திரிகைகள் சில செய்திகள் வெளியிட்டன.

அண்மையில் துன்னாலைப் பகுதியில் இராணுவ தொண்டர் படையில் இயங்கிய ஒரு வர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட விடயம் யாவரும் அறிந்ததே. இந்த நபரால் வடம ராட்சியில் அநேகமான இடங்களில் பலபேர் காணாமல் போனார்கள்,பலபேர் கொலை செய்யப்பட்டார்கள்.


அந்த நபர் அவரது வீட்டுக்கு அண்மையிலுள்ள பற்றையருகில்தான் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்றும் பரந்த வயல் வெளிகளில் தான் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்றும் பல ஊகங்கள் எழுந்தாலும் அவ்வூர் வாசிகளில் பெரும்பா லானோர் அந்த நபரால் பாதிக்கப்பட்ட சில பொதுவா ளர்களாலேயே இக்கொலை செய்யப்பட்டிக்கிறது என ஊகங்களையும் குழப்பங் களையும் ஏற்படுத்துகின்றார்கள்.

இராணுவத்தினரின் முகங்களில் போர் வெறி இப்பவும் காணப்படுவதானது பேரின வாதக்கருத்துக்களைகக்கிவரும் ஊட கங்களும், இராணுவத்துக்குள்ளேயே இன வெறிக்கருத்துருவாக்கத்தைத் தோற்றுவிக் கும் பொ.ஐ.முவினதும், ஜே.வி.பியினதும், கருத்தூட்டலேயாகும். மக்களின் இயல்பு நிலை வாழ்வு என்பது உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றுவதும் மக்கள் மீளக்குடியேறுவது மட்டுமல்ல அவர்கள் உளத்தாலும் இயல்பு நிலைக்குத் திரும்புவதுமேயாகும்.

எரிசரன்

# இப்பொழுது வடக்கிலும் - கிழக்கிலும்

GUDWIL


GUDWIL

# BRAND NEW 4 WHEEL TRACTORS

## FROM 15hp - 45hp / 2Wheel & 4Wheel Drives

- 2வருட உத்தரவாதம்
- உதிரிப்பாகங்கள் தாராளமாகக்கிடைக்கும்
- விற்பனையின் பின் இலவச பராமரிப்பு
- மூன்று வண்ணங்களில்
- பலதரப்பட்ட கருவிகள் இணைக்கலாம்
- இழுவைப்பெட்டி - உயர்த்தி சாய்விக்கவல்லது
- அரிசி ஆலைகள் - ஒரே தடவையில் நெல்லைச்செலுத்தி குற்றிய அரிசியைப் பெறலாம்.
- வட்டியில்லா தவணைமுறை

ரூ.230,000 முதல்
**இன்றே பதிவுக்கு முந்துங்கள்**
மட்டுப்படுத்தப்பட்ட கையிருப்பு

Importers & Distributers
55,Dutugemunu street,
Pamankade Dehiwela.

Tel:818415, 074-208101/2
0777-351695
Fax:818416

GUDWIL


மேலதிக விபரங்களுக்கும் - பதிவுகளுக்கும்

## AMT TRANSPORT SERVICES

பருத்தித்துறை வீதி
இருபாலை,கோப்பாய்,
யாழ்ப்பாணம்.
021-222 5784

(சி-7930)


## விவசாயப் பெருமக்களே!
## சைவ உணவக உரிமையாளர்களே!
## ஆயுர்வேத வைத்திய சிகாமணிகளே!

## எமது ஸ்தாபனத்திற்கு ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

எம்மிடம் :

* நெல் குற்றும் இயந்திரம். * உமி நீக்கும் இயந்திரம் (China). * அரிசி பொலிசர் (China).
* மிளகாய், உழுந்து, கோப்பி அரைக்கும் (நவின் கெனடி பிராண்ட்) உலகப் பிரசித்தி பெற்ற இயந்திரம்.
* எந்த விதமான கடின உழைப்பிற்கும் அதிசக்தி வாய்ந்த (லிஸ்ரரைப்) பீசல் என்ஜின் (கெனடி நவின்)
  மாக் 20 H.P 10 H.P (குதிரை சக்தி) கொண்டவை.
  பெற்றரைப் 25 H.P 15 H.P 7 1/2 H.P 6 H.P (குதிரை சக்தி) கொண்டவை.
  விசை கூடிய என்ஜின் (கெனடி நவின்) R.P.M. 1500.
* கோப்பி அரைக்கும் இயந்திரம்.
  சைவ உணவகத்துக்கு உழுந்து சட்னி, சம்பல் போன்று நீர் சேர்த்து அரைப்பதற்கு கெனடி நவின் ஈர அரையல் இயந்திரம்.
  2, 3, 5, 7 1/2, 10, 15, 20 கிலோ வரை அரைக்கும் அளவுகளில் உண்டு.
  இவற்றில் மருந்து மூலிகைகளும் அரைக்க முடிவதால் வைத்திய சிகாமணிகளுக்கும் உகந்தது.
* ஈர அரிசி அரைக்கும் China மில்.
  17, 23, 37, 42 போன்ற தங்கள் தேவைக்கேற்ப அளவுகளில் இயந்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
  இவற்றுக்கான சகல உதிரிப்பாகங்கள் றபர், ரோமம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பட்டிவகைகள் எல்லா அளவுகளிலும் "V" பெல்ட் (பட்டி) வகைகள். றபர் ஹோஸ், கிறைண்டர் பிளேற், சல்லடை வகைகள், மோட்டார் ஸ்ராட்டர் எல்லாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
* வங்கிக் கடன் வசதி அல்லது குத்தகை வசதி தேவையானால் ஒழுங்கு செய்து தரப்படும் (40% வரை).



(சி-7929)

நேரில் வரவும்

ஏக இறக்குமதியாளரும் விநியோகஸ்தரும்



## சமுத்திரா ரேட்ஸ் லிமிட்டட்

117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P 021-2222938

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்
212, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021- 2225542

# நேர்நோக்கு

## பழைய பல்லவி

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான் கொண்டுவந்த அரசியல் தீர்வுப் பொதியின் அடிப்படையிலேயே சமாதான நகர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என தற்பொழுது கூறியிருக்கிறார். அரசியல் யாப்பிற்கு முரணாக எதனையும் செய்யக்கூடாது என வலியுறுத்திய அவர், இதனையும் தெரிவித்திருக்கிறார்.

1995 யூலை மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையை மேற்கொண்ட அவர் பின்னே சென்று அளவெட்டியில் தங்கி நின்று கொண்டு அடுத்து ஒரு கொடூரயுத்தத்திற்கு தயாராகப்படைக்கு விப்பைச்செய்து கொண்டிருந்த வேளை இத்தீர்வுப் பொதி ஊடகங்களுக்கு கசிய விடப்பட்டது. அதனையும் ஒரு உத்தியோக பூர்வ ஆவணமாக வெளியிட அவர் விரும்பவில்லை.

நீலன்திருச்செல்வம் - பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோரின் கூட்டுத்தயாரிப்பென வர்ணிக்கப்பட்ட இது வெளிவந்த போது அற்புதமான ஒரு தீர்வுத் திட்டம் என பலராலும் புகழப்பட்டது.

ஆனால் இது குறித்து சந்திரிகாகுமாரதுங்க கருத்துக் கூறியபோது "விடுதலைப் புலிகளை ஓரங்கட்டவும், அவர்களை அழிக்கவும் இந்தத் தீர்வு யோசனைகள் அவசியம்" என்று கூறினார். எனவே அவர் நடத்திய "சமாதானத்துக்கானயுத்தத்திற்கு" அரசியல் அங்கீகாரம் பெறுவதற்கு முன்வைக்கப்பட்டதே இந்த யோசனைகள் என்பதும் இவை வெறும் யோசனைகளே தவிரத்தீர்வு அல்ல என்பதும் மூடி மறைக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் மீது பாரிய கொடூரம் திணிக்கப்பட்டது.

தன்னை சமாதான தேவதையாகக்காட்டிக் கொண்டு அதே வேளை யுத்தத்தையும் நடத்த தனது ஆட்சிக்காலம் முழுவதும் இத்தத் தீர்வுப்பொதியைப் பயன் படுத்தினார்.

இந்த யோசனைகளுக்கு பலதிருத்தங்கள் முன்வைக்கப் பட்டு, சிதைக்கப்பட்ட, சடலமாக்கப்பட்ட நிலையில் அதனை அலங்கரித்து தனது முதலாவது பாராளுமன்ற ஆட்சிக்காலத்தின் இறுதிக்கட்ட அமர்வுகளில் அதனை நகல் திட்டமாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி இந்த நகல் திட்டத்துடன் சேர்த்து சனாதிபதி முறையை நீக்குதல் உட்பட பல விடயங்களை அரசியலமைப்புக்குத் திருத்தமாக இணைத்தால் மட்டுமே ஆதரிப்பதாக கூறிவந்தது. அதற்குச் சந்திரிகா ஒரு போதும் சம்மதிக்கமாட்டார் என்ற நிலையிலேயே அதனை வலியுறுத்தியது.

அத்துடன் பொ.ஐ.மு.வின் அன்றைய கூட்டணிக்கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயேஎழுந்த எதிர்ப்பு என்பன காரணமாக பிரேரணையே கைவிடப்பட்டது.

சுமார் ஐந்து வருடங்கள் உலகை ஏமாற்ற சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க கையில்வைத்திருந்த தீர்வுப்பொதி குறித்து மீண்டும் அவர் இப்போது பேச்சு எடுத்திருப்பது குறித்து எவரும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. மாற்றுத்திட்டத்தை ஆளும் கட்சிகோருவதால் அவர் இதனை முன்வைத்திருக்கக் கூடும்.

ஆனால், அவரின் இந்தக் கூற்றானது அவரின் மனநிலையை புலப்படுத்துகிறது. அதாவது இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டை நிலையை அடைந்திருப்பது வெளிப்படையான விடயம். இடைக்கால நிர்வாகசபையை ஏற்றுக்கொண்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சி பின்னர் உபகுழு ஒன்றுக்குப்போய் அதனையும் செயற்படுத்த முடியாது திணறுகிறது.

புலிகள் யுத்தத்தினால் சீரழிந்து போயுள்ள தமிழர் தாயகத்தைப் புனரமைக்க வழங்கப் படும் நிதியை கையாளும் வலுவுடைய ஓர் இடைக்காலஅமைப்பை இடைக்கால நிர்வாகசபையை கோரிநிற்கின்றனர்.

இந்நிலையில் அனைவராலும் புறக்கணிக்கப்பட்ட அவரது தீர்வுப்பொதி என்னும் புதைக்கப்பட்ட சடலத்தைத் தோண்டியெடுத்து உயிரூட்ட வேண்டுமென்று கோருவது நிச்சயமாக அவரது சமாதான விரோத மனப்பாங்கை வெளிப்படுத்துகிறது.

மேலும் இடைக்கால ஏற்பாட்டிலிருந்து முன்னேறி சமஷ்டி முறையிலான தீர்வொன்றைக் காண்பது தொடர்பாக பரிசீலிப்பது என்ற இணக்கப்பாட்டுடன் அரசாங் கமும் - விடுதலைப்புலிகளும் இருக்கையில் தீர்வு முயற்சிக்கு அடிப்படையாகவே அவர் தனது தீர்வுப் பொதியை முன்வைத்திருக்கிறார்.

முன்னர் அவர் இந்தத் தீர்வுப்பொதியை என்ன நோக்கத்துக்காக முன்வைத்தாரோ அதனை அவர் அடையமுடியாமல் போனது மட்டுமன்றி பாராளுமன்றத்தையும் பறிகொடுக்க நேர்ந்தது. இப்பொழுதும் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கு அவர் அதே தீர்வுப்பொதியை முன்வைத்திருக்கும் நி[illegible]யில் அவரது தற்போதைய [illegible]க்கம் சிறிலங்காவுக்கும் அவருக்கும் கேடு விளைவிப்பதாகவே அமையும்.

**வேலவன்**

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1996 முதல் இதுவரை குடாநாட்டில் 588 வெடி பொருள் விபத்துக்கள் சம்பவித்துள்ளன. 65 சாவுகள் நிகழ்ந்துள்ளன. இப்பொழுதும் நிகழ்கின்றன. வன்னியில் 1999ல் வெடிபொருள் விபத்துகள் சம்பவிக்க ஆரம்பித்தன. இதுவரை வன்னியில் 356 வெடி பொருள் விபத்துகள் சம்பவித்தன. இதில் 39 சாவுகள் சம்பவித்துள்ளன. இந்த ஆண்டு 5 விபத்துகள் மட்டும் நிகழ்ந்துள்ளன. குடாநாட்டில் சர்வதேச நிறுவனங்கள் களமிறங்கிய பின் 1சாவுடன் 7 விபத்துகள் சம்பவித்துள்ளன.

கடைசியாக மன்னார் - சன்னார் கிராமத்தில் வெடி பொருட்கள் புதைக்கப்பட்ட இடங்களை அடையாளம் கண்டு அதற்கு பாதுகாப்பு வேலியை மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அமைத்தனர்.

ஒரு அரசசார்பற்ற நிறுவனம் மற்றொரு நிறுவனத்திடம் நிதியுதவி பெறுவதற்காக அதன் பிரதிநிதிகளை அழைத்துக் கொண்டு சன்னாருக்கு வந்தனர். அந்தப் பிரதிநிதிகள் வருகைக்கு முன்பாக வெடிபொருள் ஆபத்து வேலிகளை அந்த நிறுவனம் அகற்றிவிட்டது. எதுவித பிரச்சினையும்மில்லாது மக்கள் மீளக்குடியமரக் கூடிய கிராமம் அது எனக்காட்டி அந்த பிரதிநிதிகளிடம் உதவியை [illegible]ந்த நிறுவனம் கேட்டது.

இதைப்பா[illegible]த ஏனைய பகுதி மக்கள் வெடிபொருள் பிரச்சினை இல்லையென்றால் தான் உதவும் நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கும் எனக் கருதி உயிராபத்தை விளைவிக்கும் வெடிபொருள்களுள்ள வேலிகளை அகற்றிவருகின்றனர்.

வேலியகற்றலை முன்னுதாரணமாகச் செய்து காட்டிய நிறுவனம் எது தெரியுமா?

அது.... சேவாலங்கா.

● சிறிலங்கா இராணுவம் தமிழ் பகுதிகளில் மிதிவெடிகளை மட்டும் புதைப்பதைவிட மிதிவெடிகளுடன் எறிகணைகள், கண்ணிவெடிகள், விமானக் குண்டுகளையும் இணைத்து வைக்கின்றது.

● மனிதநேய கண்ணிவெடி அகற்றும்பிரிவில் 48 ஆண்கள் கண்ணிவெடி அகற்றுபவர்களாக பணிபுரிகின்றார்கள். இதில் மேலும் 25 பெண்கள் கொண்ட அணியும் உருவாக்கப் படவுள்ளது.

● பளையில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும்பிரிவுக்கு உதவும் என்ற போர்வையில் **UNDP** ஊடாக சிறிலங்கா இராணுவம் தமது மிதிவெடி வரைபடங்களை வழங்கியது. அதில் 30 மிதிவெடிகள் இருப்பதாக கூறப்பட்ட இடத்தில் 1050 மிதிவெடிகள் எடுக்கப் பட்டன.

● 2000ம் ஆண்டின் பின் மிதிவெடி விபத்துகளில் 2000க்கும் அதிக இராணுவத்தினர் சிக்கினர். மிதிவெடியகற்றும் வேளையில் 200 வரையான இராணுவத்தினர் சிக்கினர். படையினர் குடாநாட்டில்தாம் 46,000 வெடி பொருட்களை அகற்றியிருப்பதாகக்கூறுகின்றனர். மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவு இது வரை 16 விபத்துக்களைச் சந்தித்திருக்கிறது. இதில் ஒருவர் இறந்துள்ளார். 2பேர்கால்களை இழந்தனர். ●

## பிறந்தநாள் வாழ்த்து




### செல்வன் ரவிராஜன் பவித்திரன்

அச்சுவேலியைச்சேர்ந்த ரவிராஜன், பளையைச்சேர்ந்த கிருஷ்ணகுமாரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பவித்திரன் தனது 1வது பிறந்தநாளை 30/05/2003இன்று றெட்பானா விசுவமடுவிலுள்ள தனது தற்காலிக இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அம்மா,அப்பா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டி, சித்தா, சித்தப்பா மற்றும் யாழ்ப்பாணம், விசுவமடு, கனடா, லண்டனில் வசிக்கும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் கொட்டடி விநாயகர் அருள் பெற்று பல்கலையும் பெற்று நீடுழிகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**றெட்பானா,**
**விசுவமடு.** (3221) **திருமதி. ரவிராஜன்**

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -20



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் -20

..........................................................
..........................................................
..........................................................
..........................................................

பெயர் : ..................................
முகவரி : ..................................
..................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் 19



**ம.அருள்யோண்சன்,**
**இல.141.புதிய புன்னை**
**நீராவி நகர்,**
**விசுவமடு**

### பரிசுக்குரிய வரிகள்

**புத்தரைக் கையிலேந்தி புனிதமாய்க் காட்டினாலும்**
**நித்தமும் நெஞ்சில் புத்தர் நிறைந்திட வேண்டும் - நாட்டில்**
**பந்தமும் பாசத்தோடு பகைமையை மறந்து மக்கள்**
**நித்தமும் வாழ்வாரானால் புத்தரின் மகிமை ஓங்கும்.**

### பாராட்டுக்குரிய வரிகள்

*மகனே உன் வேதனையை*
*என்னால் பார்க்க முடியவில்லை*
*உன் சுமையை புத்தபகவான் தாங்கவில்லையா*
*அதனாலா நீ தாங்கி வைத்துள்ளாய்.*

வதனா -வி
செந்தளிர் இல்லம்,
முல்லைத்தீவு.

*புத்தம் சொன்னது புதைகுழிக்கென்று*
*ஆன பின்பு......*
*எச்சம் இருக்கும் சிலையும் மூழ்குவதா?*
*வாழட்டும், தூக்கிவிடு.*

தே. நிலவன்,
தமிழீழம்.

*ஆயிரமாயிரம் அறத்தமிழ் மறவரின் ஆதிமதமாம்*
*அநாதிதர்மம் இந்துமத அடியாரை அடியோடாழ் கடலில்*
*ஆழ்த்திவிட்ட அசதி ஆற அத்தெளிநீரில் நீராட்டும்படி*
*அரற்றினாரா புத்தர் உம் கனவில்???*

அருட் செல்வி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

*வான் குண்டு போட்டவரை*
*வானமே பொறுக்கவில்லை,*
*காணா இடத்துக்குப் போ என*
*கடும் மழை பொழிந்ததோ*

எஸ். சிவா,
தும்பளைமேற்கு,
பருத்தித்துறை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

# பவர் செலுலர் டிரேடிங் கம்பனி நிறுவனத்தினர்




யாழ் நகரில் முழுவதும்
தென்மராட்சி வடமராட்சி வலிகாமம் தீவகம்
இணைந்து வழங்கும் சேவை இது

சிக்கலில்லாத தெளிவான வலையமைப்பையும் துரிதமான சேவையையும் கொண்ட மேசைத் தொலைபேசி உங்களுக்கு இலாபகரமான விலைகளில் உண்டு.

இரவு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

உத்தரவாதம் உண்டு

உங்களுக்கான மேசைத் தொலைபேசி இணைப்பைப் பெறுவதற்கு இன்றே விரையுங்கள்

IDD எடுப்பதற்கு 25/=

## Power cellular

1st Fleat. 185,Kasthuriyar Road,Jaffna.
(வின்சர் தியேட்டருக்கு முன்பாக நியூ லலிதா கட்டடம்)

☎071-399220
☎0777-242416
Fax-071-381125
E-mail:Power@c/.lk.

எமது அங்கீகாரம் பெற்ற முகவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| மிது கொம்<br>கே.கே.எஸ் வீதி,சுன்னாகம்.<br>021-5560<br>021-5686<br>0777-720139 | திருப்பதி தொலைத்தொடர்பு நிலையம்<br>0777-722914<br>070-213352<br>021-5940<br>021-5732 | பவர் தொலைத்தொடர்பு நிலையம்<br>நெடுந்தீவு.<br>071-381192<br>071-381187 | ஆர்.ஆனந்தன்<br>கவைவாணி வீதி, சித்தங்கேணி. |
| விஜய் வீடியோ சென்ரர்<br>புங்குடுதீவு.<br>071-399113. | வ.அரவிந்தன்<br>சுழிபுரம்.<br>0777-550949 | சொலெக்ஸ் ஒப்றிகல்<br>100,கண்டி வீதி, சாவகச்சேரி.<br>0777-855328 | சுதன் தொலைத்தொடர்பு நிலையம்<br>மிருசுவில்.<br>0777-584896 |
| குட்டி<br>பண்டத்தரிப்பு.<br>071-399208 | சன் தொலைத்தொடர்பு நிலையம்<br>திக்கரை காரைநகர்.<br>070-213190<br>071-299264 | ஆர்.தயாகரன்<br>வட்டுக்கோட்டை.<br>0777-244524 | இந்திரா தொலைத்தொடர்பு நிலையம்<br>நயினாதீவு அனலை தீவு<br>071-793226 |

[சி-7931]



# வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம்

உறவுகளோடு உரையாடி உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும்
தகவல்களை விரைந்து பரிமாறி நிறைவுகளைப் பெற்றிடவும்

உங்களது சேவைக்கான எங்களது கட்டணங்கள்

☎அமெரிக்கா,கனடா,ஐரோப்பிய நாடுகளுக்கான நேரடி அழைப்புகளுக்கு நிமிடம் ஒன்றிற்கு 35உருபா/=
☎இணையத்தளத்தினூடே நிறைவாக உரையாடுவதற்கு நிமிடமொன்றிற்கு உருபா18/=
☎உள்நாட்டு வெளி. அழைப்புகளுக்கு நிமிடமொன்றிற்கு உருபா 13.50/=
☎உள்வரும் அழைப்புக்கள் எல்லாவற்றிற்கும் நிமிடமொன்றிற்கு உருபா5/=

உலகத்திலுள்ள உங்கள் உறவுகளின் ஒலியை
வன்னிக் கிராமங்களின் வாசலுக்கு எடுத்து வரும் பணியில்...

கிளிநகரின் மத்தியில் (பழைய) அரசினர் வைத்தியசாலையின் முன்பாக

## இது வரை நாம் கால் பதித்த இடங்கள்...

☎யாழ்.சாலை,கிளிநொச்சி.
0094-071-349580
0094-071-349581
0094-071-349559
0094-071-345621

☎சந்தையருகாமை,வட்டக்கச்சி.
0094-071-345624

☎முல்லைசாலை,ஒட்டுசுட்டான்.
0094-071-349567

☎யாழ்.சாலை,மாங்குளம்.
0094-071-345622

☎முல்லைசாலை, தருமபுரம்.
0094-071-345626

வெளிநாட்டிலுள்ள உங்களின் உறவுகளிடமிருந்து தகவல்களை உங்கள் வீட்டு வாசலுக்கே எடுத்துவர வன்னியன் தொலைத்தொடர்பு நிலையங்களில்

## வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம்

"எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்"
எனும் அட்டையைப் பெற்றுக் கொள்ளுங்கள்

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.